www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெற்


# தமிழோசை

THAMIZHOSAI

உள்ளே.....

* மாதிரி சட்ட மன்ற..
* காலம் உனக்கொரு..
* சொல்லாரம்-4
* சமூகப்பலகை


ஓசை : 1
ஒலி :15
ஆங்கீரஸ ஹூ கார்த்திகை மீ 26ந் திகதி (11-12-1992) 253 Western Avenue London W3 0PP Tel: 44-(0)81-993 7652 Fax: 44-(0)81-993 8611


## பாபர் மசூதி தரைமட்டம்

# ஆயிரக் கணக்கில் மக்கள் படுகொலை

(நமது நிருபர்)

**டிசம்பர் 6ம் தேதி கரசேவை என்ற போர்வையில் பாரத ஜனதாக்கட்சி, விஸ்வ ஹிந்து பரிசாத்துடன், நான்கு கட்சிகள் சேர்ந்த கூட்டணியினர் 475 ஆண்டுகள் முன்பு கட்டப்பட்ட பாபர் மசூதியை தரைமட்டமாக்கினார்கள். உத்தரப் பிரதேச அரசு மேல் நீதிமன்றத்துக்குக் கொடுத்த உத்தரவாதத்தையும் மீறி, காவலுக்கு நின்ற பொலீசாரை பார்வையாளராக நிற்க வைத்தது.**



மத்திய அரசின் பின்வாங்கலால் அயோத்தி 48 மணி நேரம் சட்டம் கட்டுப்பாடு ஏதுமில்லாமல், மத வெறியால் உந்தப்பட்டவர்களின் கையில் எரிந்து கொண்டிருந்தது. 8ம் தேதி காலை மசூதி தரைமட்டமானதன் பின்புதான் அதிரடிப்படையினர் அயோத்தியில் இருந்து அனைவரையும் வெளியேற்றினர். எந்த அடக்கு முறையும் பாவிக்கப்படவில்லை என அரசு கூறிய போதிலும், இச்சம்பவத்தின் எதிரொலியாக 1000த்துக்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சரியான விபரங்கள் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதும் தான் தெளிவாகும்.

பெரிய நகரங்களில் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் அவசரகாலச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

கடைசியாக கிடைத்த செய்திகளின்படி ஐந்து தீவிரவாத இந்து, முஸ்லிம் கட்சிகள் மீது தடைவிதிக்கப்பட்டுள்ளது. இக்கட்சிகளின் நிதிகள் சொத்துக்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்படும் என்றும் தெரியவருகிறது.

பல ஆண்டுகள் புகைத்துக் கொண்டிருந்த ராம ஜென்ம பூமி - பாபர் மதுதி பிரகாரம், பாரதீய ஜனதா கட்சி, விஸ்வ ஹிந்துப் பிரசாத் போன்ற கட்சிகளால் அரசியல் விவகாரமாக்கப்பட்டது. இரண்டு வருடங்களுக்கு முன்பு இதே பிரச்னை இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோரின் சாவுக்கு காரணமாக இருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேல் நீதிமன்றத்துக்கு, பா.ஜ. கட்சி எம்.பீ.யான சுவாமி சின்மயதனந்தாவும், உத்தரப் பிரதேசத்தை ஆளும் பா.ஜ.அரசும் டிசம்பர் 6ம் தேதி தொடங்கவிருந்த கரசேவையின் போது எந்தவிதமாக கட்டிட வேலைகளும் நடைபெறமாட்டாது என கடித மூலம் உறுதியளித்தன. இதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், "அடையாள" கரசேவையை நடத்த, பாடல், பஜனை மற்றும் மந்திரம் ஓதுதல் போன்றவற்றிக்கு மட்டும் அனுமதி வழங்கியது. அத்தோடு ஒரு அனுபவம் மிக்க நீதிபதியையும், நீதிமன்ற விதிகள் கண்காணிக்க நியமிக்கும்படி அலகாபாத் உயர் நீதிமன்றத்துக்கும் கட்டளை பிறப்பித்தது.

நவம்பர் 29ம் தேதியில் இருந்தே கரசேவைக்காக அயோத்தியில் கூட்டம் கூடத் தொடங்கிவிட்டது. பாரதீய ஜனதா கட்சியின் தலைவர்கள் முரளி மனோகர் ஜோஸி மதுராவில் இருந்தும், எல்.கே.அத்வாணி வர்ணாசியில் இருந்தும் அயோத்தியை நோக்கி டிசம்பர் 1ம் தேதி ரத யாத்திரை மேற்கொண்டனர். சின்மயானந்தா- மத்திய பிரதேச அரசினதும் உறுதி மொழிக்கு, விஸ்வ ஹிந்துப் பிரசாத்தோ அல்லது பாரதீய ஜனதாக் கட்சி தலைமைப் பீடமோ கையொப்பதாரர்கள் அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.

டிசம்பர் 5ம் தேதி சனியன்று ஒரு லட்சத்துக் கூடியவர்கள் அயோத்தியில் கூடி விட்டனர். உணவு, மருத்துவ, சுகாதார வசதிகளுக்காக மேலும் கூடிய தொகையினர் அயோத்திக்கு வருவதை தடுக்கும் முகமாக, கட்சித் தொண்டர்கள் உத்தர பிரதேசத்தின் எல்லா மூலைகளுக்கும் விரைந்து அனுப்பப்பட்டனர்.

தேசிய ஒருமைப்பாட்டுச் சபை, நாட்டின் சட்டத்தை பாதுகாக்கவும், அரசியல் அடிப்படை அமைப்பை நிலை நாட்டவும், பிரதமர் நரசிம்மராவ் வேண்டிய நடவடிக்கைகளை கையாள உத்தரவு வழங்கியது.

இதன் அடிப்படையில் அதிரடிப் படையினர் அயோத்திக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

கரசேவைக்கு சென்றவர்கள் பாபர் மசூதியை உடைக்கத் தொடங்கியபோது, மத்திய பிரதேச பொலீசாரோ அல்லது அதிரடிப் படையினரோ மேலிடத்தில் இருந்து உத்தரவேதும் இல்லாது பார்வையாளராகவே இருந்தனர். இந்தச் சம்பவம் தொடங்கி 48 மணிநேரத்தில் மசூதி தரைமட்டமாகிய பின்பே மேலதிக அதிரடிப் படைகள் அனுப்பப்பட்டனர். அயோத்தியை விட்டு எல்லோரும் வெளியேறினார்கள். ஒரு அசம்பாவிதமும் இல்லாமல் அடக்குமுறை பாவிக்காமல் எல்லோரும் கலைந்து சென்றனர் என்று அரசு அறிக்கை விடுத்த போதிலும், தற்போது இந்த நடவடிக்கையின் பின்னணியாக 1000க்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 14 மாகாணங்களில் அவசரகாலச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் நரசிம்மராவ் சம்பவம் நடந்த பின்பு எல்.கே.அத்வாணியையும், முரளி மனோகர் ஜோஸியையும் தடுப்புக்காவலில் வைக்க உத்தரவு பிறப்பித்தார்.இதை எதிர்த்து பாரதீய ஜனதாக் கட்சி தேசம் முழுவதும் வேலை நிறுத்தம் செய்யத் தூண்டியது.

பாகிஸ்தானில் இந்திரா காந்தியின் பாட்டனார் கட்டிய கோவில் உட்பட இருபத்தி ஐந்து கோவில்கள் தகர்க்கப்பட்டதுடன் இருபதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

வங்காள தேசத்திலும் இந்துக்களின் கோவில்கள் சொத்துக்கள் ஆகியனவும் சேதமாக்கப்பட்டன. கணிசமான தொகையினர் கொலை செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

நாட்டின் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தும் நோக்குடன் பிரதமர் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தேசிய ஒருமைப்பாட்டு அரசு ஒன்றை நிறுவ முனைந்து வருகிறார் என நம்பப்படுகிறது.

நேருவின் சிந்தனையில் உருவெடுத்த தனித்துவம் பேணும் பல்லின சமுதாயம் நீண்டகாலம் நீடிக்குமா?

## மேலதிக அபராதம்

(லண்டன் டிச.10)

தக்க ஆவணங்கள் இல்லாமல் பிரித்தானியாவிற்குள் நுளைய முயற்சிப்போரை ஏற்றிவரும் விமானங்களுக்கும், கப்பல்களுக்கும் புதிய அபராதப் பணம் விதிக்கும் சட்டத்தை, நாடாளுமன்ற தெரிவுக் குழுவை அங்கீகரிக்க வைப்பதற்கு பிரித்தானிய அரசு முயற்சிகள் செய்து வருகிறது.

ஏற்கனவே அபராதமாக அறவிடப்பட வேண்டிய 240 லட்சம் பவுண்டுகள் சேகரிக்கப்படாமல் இருக்கின்ற போதிலும், ஏற்கனவே கையாண்ட வழிகளால் அரசியல் தஞ்சம், குடியுரிமை கோருவோர் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது என்ற காரணத்தால் இந்த யுக்தியை அரசு கையாள்கிறது என நம்பப்படுகிறது.

அரசியல் தஞ்சம், குடியுரிமை கோருவோர் மேன்முறையீட்டு சட்டம் பற்றிய இந்த மசோதாவை தெரிவுக்குழு இன்று ஆராயவுள்ளது. இந்த சட்டத்தில் ஒரு பகுதியாக, தக்க ஆவணங்கள் இல்லாமல் பிரித்தானியா ஊடாக பயணம் செய்வோரை ஏற்றி வரும் விமானம், கப்பல் ஆகியவற்றிற்கும் அபராதப் பணம் விதிக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆலயங்கள் தீக்கிரை

(லண்டன் நிருபர்)

இந்தியாவில் பாபர் மசூதி நிர்மூலமாக்கப்பட்டதின் எதிரொலியாக, பிரித்தானியாவில் பல இந்து ஆலயங்கள் தீ வைக்கப்பட்டும், தாக்கப்பட்டும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்து முஸ்லிம் சமூக தலைவர்கள் அமைதி நாடி வேண்டுகோள் விடுத்தும்,பல லட்சக்கணக்கு பெறுமதியான கோவில்கள் நாசமாக்கப்பட்டன. போறஸ்ட் கேற்றில் ஒரு மசூதியும், லூட்டனில் ஒரு சீக்கிய கோவிலும் இந்த மதவாத தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டன.

## மக்களின் குறைகளை நேரில் கண்டனர்

(நமது நிருபர்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் குழு, டொமினிக்ருவார் தலைமையில், யாழ்ப்பாணப் பகுதிகளிற்கு விஜயம் செய்து, அகதி முகாம்கள், அவற்றின் தேவைகள், வினியோக முறைகள் போன்றவற்றை நேரில் பார்வையிட்டுள்ளது.

பொது மக்களிடம் குறைகளைக் கேட்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்வது தொடர்பாக, யாழ் அரச அதிபர், யாழ் - இராணுவத் தளபதி, மற்றும் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடாத்தியுள்ளனர். உணவு, மருந்து, மற்றும் அத்தியாவசிய தேவைகளின் வினியோகங்களை அதிகரிக்க வைக்கும் சில முயற்சிகளில் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும், இராணுவ அதிகாரிகளும் சில இணக்கங்களை கண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றை அமுல்படுத்தும் போது, தமிழ்ப் போராளிகளின் தலையீடுகளை கட்டுப்படுத்த, இரு தரப்பினரும், ஒத்துழைப்பு வழங்குவதென்றும், தீர்மானித்துள்ளனர். இதன் மூலம் அதிகரிக்கச் செய்யும், யாழ் குடாநாட்டிற்கான வினியோகம் நடவடிக்கைகள், அவலத்தில் உழலும் மக்களின் தேவைகளை ஓரளவு நிறைவு செய்யும் என எதிர் பார்க்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழோசை

### சந்தா படிவம்

தமிழோசை பத்திரிகையை அஞ்சலில் பெற கீழ்க்காணும் விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்து அதற்கான பணத்தை காசோலையாகவோ அல்லது தபால் கட்டளையாகவோ அனுப்பி வைக்கவும்.

(Please mark Cheques or Postal Orders Payable to "THAMIZHOSAI")

Name: ____________________

Address: ____________________

____________________

____________________

____________________

Postcode: ____________________

| | UK/Europe | Other Countrys |
|---|---|---|
| 12 Issues | £ 7.00 | Us $ 20.00 |
| 24 Issues | £ 12.00 | Us $ 40.00 |

PLEASE SEND THIS FORM TO

**THAMIZHOSAI**
253, WESTERN AVENUE
LONDON W3 0PP
UNITED KINGDOM

## நிறவாத தாக்குதல்

*லண்டன் டிச.9*

பிரித்தானிய தொழிற் கட்சியைச் சேர்ந்த டேவிட் வின்னிக் எம்.பீ. தாக்குதல் செய்த, "நிறவாத தாக்குதல், குற்றவியலான ஒரு சட்ட விரோதச் செயல்" என்று மாற்றக் கோரும் மசோதா, முதலாவது சுற்றில் எதிர்ப்பு இல்லாமல் நாடாளு மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

## ரி.வி. லைசென்ஸ் விலைஉயர்வு

*(லண்டன்)*

1993ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் வண்ண ரி.வி. லைசென்ஸ் விலை £83.00 ஆகவும், கறுப்பு வெள்ளை ரி.வி லைசென்ஸ் £27.50 ஆகவும் உயர்த்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## கோவில் சமாதானப் பேச்சில் குழப்பம்

*(லண்டன் நிருபர்)*

கிழக்கு லண்டனிலுள்ள போறஸ்ற் கேற்றில் உள்ள சுவாமி நாராயணன் கோவிலில் முஸ்லிம் மற்றும் இந்து சமயத்தைத் சேர்ந்த தலைவர்கள் சமாதான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருந்த போது இனம் தெரியாத நாலு நபர்கள் கூரையில் ஏறியது கண்டு, கோவிலுக்கு தீவைக்கப் போகிறார்கள் என நம்பப்பட்டது.

பெண்களும் குழந்தைகளும் இந்தக் கூட்டத்தில் இருந்தபோதும் அனைவரும் அமைதியாகவே இருந்தார்கள். நிர்வாக அங்கத்தினர்கள் ஏணி வைத்து அவர்களைப் பிடிக்க முயன்றபோது கூரைகளுக்கு மேலால் ஓடி, கோவில் பின் தோட்டத்தின் வழியாக தப்பிவிட்டார்கள். அவர்களில் இருவர் பின்பு பொலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பிறந்த நாள் வாழ்த்து



**19.12.1992**

**செல்வன் அஜந்**

**ஸ்ரீகணேசகுமார் ஸ்ரீகௌரிதேவி** (குமார், கௌரி) தம்பதிகளின் செல்வப் புதல்வன் அஜந் 19.12.1992 சனிக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை, லண்டனில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, அப்பப்பா, மாமா, பாட்டாமார், பாட்டிமார், மாமாமார் இலங்கையில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, பாட்டாமார், பாட்டிமார், சிவா சித்தி உற்றார் உறவினர் அனைவரும் வினாயகப் பெருமான் அருளால் பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

வி.குமார்
இல.16, டின்டன் றோட்
லண்டன் S.W.19

SUNRISE RADIO
14.12.92
திங்கள் இரவு
10.00-11.00 மணி

### நிகழ்ச்சிகள்

*செய்திகள்
*இசையும் இலக்கியமும்
*வாழ்த்துவோம்
*'தனிமையில் இனிமை' -எழுத்தாளர் சிவசங்கரி

# SPICEWAY OF WIMBLEDON

நத்தார், புதுவருட, பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு

## விஷேட மலிவு விற்பனை

**இலங்கை, இந்தியா, பங்களாதேஷ்**
**உணவுப்பண்டங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள்**

இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட கட்ட சம்பல், அம்புல் தியல், யாழ்ப்பாணத்து கறி மிளகாய்த்தூள், ஹரிச்சந்திர நூடுல்ஸ், மரக்கறி வகைகள், உறை பதனிடப்பட்ட கடல் உணவுப் பொருட்கள்

**Halal** இறைச்சி வகைகள்

இந்திய வாரப் பத்திரிகைகள் சஞ்சிகைகள்

தமிழ் - சிங்கள வீடியோ, ஓடியோ கசெற்கள் மற்றும் **CD** போன்றவற்றுக்கு நாடுங்கள்

**21 - 23 KINGSTON ROAD, LONDON SW19**
**TEL: (081) 540 5526**

விற்பனை நேரம்: ஏழு நாட்களும் காலை 9.30 - மாலை 9.00



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# செய்திச் சரம்

04.12.92

## கிளாலியில் சிக்குண்டவர்கள் திரும்பவில்லை

ஆறு உணவுப் படகுகளுடன், கிளாலியில் பயணம் செய்த பயணிகள் படகும், 28ம் தேதி- கடற்படையின் சுற்றி வளைப்புடன் தாக்குதலிற்கு இலக்காகின். 11 பெண்களுடன் 3 ஆண்களும் இருந்த இப்படகு சுற்றிவளைக்கப்பட்ட வேளை- ஒருவர் தப்ப முனைகையில், கடலில் மூழ்கி இறந்துள்ளார். ஏனையோர் என்ன ஆனார்கள் என்பது இதுவரையில் தெரியவில்லை.

மேற்படி பெண்களில் - 8 பேர், யாழ் பல்கலைக் கல்லூரி மாணவிகளாவர். இச்சம்பவத்தின் எதிரொலியாக- கிளாலி கடல் பாதையில், அனைத்து படகு சேவைகளும், இடைநிறுத்தப்பட்டன.

## வல்வெட்டித்துறையில் மீனவர் தாக்கு

யாழ் வல்வெட்டித்துறைக் கடற்பகுதியில், மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது, கடற்படை படகொன்றில் இருந்து- தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இவர்களில் நால்வர் கடலில் குதித்து தப்ப, மூவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

05.12.92

## கிராமங்கள் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு- மாவட்டத்தில் படைக்குவிப்பையும், சோதனைகளையும் அதிகரித்துள்ள அரச படைகள், அதிகாலை வேளை பல கிராமங்களை சுற்றிவளைத்து, தேடுதல்களை நடாத்தின. 16 முதல் 40 வயது வரையான ஆண், பெண்கள் சகலரும், பொது இடமொன்றிற்கு அழைக்கப்பட்டு, சோதனையிடப்பட்டனர். 100ற்கு மேற்பட்டோர் சந்தேகத்தின் பேரில், முகாம்களிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

குண்டு வெடிப்புகளும், சிறு சிறு தாக்குதல்களும், அதிகரிக்க ஆரம்பித்த மட்டக்களப்பு பகுதிகளில், இவ்வகை சுற்றிவளைப்புகளும், தேடுதல்களும் அதிகரித்துள்ள அதே வேளை, பல புதிய இராணுவ முகாம்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

## "சர்வதேச விசாரணை" வரவேற்கத்தக்கதே!

யாழ்- ஊர்காவற்துறையில், படுகொலை செய்யப்பட்ட இராணுவத் தளபதிகளின் கொலையை விசாரிக்க, 'சர்வதேச விசாரணைக் குழு' அழைக்க இலங்கை அரசு இணங்கியிருப்பதை- வரவேற்பதாக, விடுதலைப் புலிகள் பேச்சாளர் லோரன்ஸ் திலகர் பாரீசில் இருந்து- அறிவித்துள்ளார்.

இக்கொலைகளிற்கு பொறுப்பானவர்கள், விடுதலைப் புலிகளே என்பதோடு- அதில் சம்பந்தப்பட்டவர்கள், பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் குறிப்பிட்ட அவர், இதை உறுதி செய்ய சர்வதேச விசாரணை நல்லதே என்றும் குறிப்பிட்டுள்ளார்.

06.12.92

## கடலில், படகுடன் பிடிபட்டனர்

புத்தளம் மாவட்டம், முந்தில் கிராம கடற்பகுதியில், படகொன்றில் சென்று கொண்டிருந்த 12 தமிழ் இளைஞர்கள், படையினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். படகில், இவர்கள் வசமிருந்த ஆயுதங்கள், காட்டு உடுப்புகள், ஆபரணங்கள், முகமூடிகள், கமெராக்கள் போன்ற போர்க்கால உபகரணங்கள பலவும், கைப்பற்றப்பட்டன. இவர்களது வாக்கு மூலப்படி, புத்தளத்தில் தேடுதல் நடாத்தி- மேலும் சில தமிழ் இளைஞர்களை வீடுகளில் கைது செய்துள்ளனர்.

## புலிகள் சடலங்கள் மக்களால் ஒப்படைப்பு

வவுனியா- பாவற்குளம் பகுதியில், பதுங்கி இருந்த இராணுவ அணி ஒன்று- அவ்வழியால் சென்ற விடுதலைப்புலிகள் மீது நடாத்திய தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர். இவ் இருவரினது சடலங்களை அப்பகுதி மக்கள் மூலமாக, நொச்சிமோட்டையில் உள்ள புலிகளின் தடை முகாமில் சேர்ப்பித்தனர் எனத் தெரிய வந்துள்ளது.

## கொழும்பில் பெண்கள் தேடப் படுகின்றனர்

கொழும்பில் குண்டு வெடிப்பின் எதிரொலிப்புகள் இன்னமும் ஓயவில்லை. பெண்புலிகள் ஊடுருவி இருப்பதாக தகவல் கிடைத்ததாக கூறி- வீடுவீடாக சோதனையிட்டு, இளம் பெண்கள் விசாரிக்கப்படுகின்றனர். ஏராளமானோர் தடுப்பு முகாம்களிற்கு கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 2000 பேரை, விசாரித்து விடுதலை செய்துள்ளதாக கூறும் அரசு, இதைவிட அதிகமான இளைஞர்களை தொடர்ந்தும் காவலில் வைத்துள்ளது.

## உத்தர பிரதேச முதல்வர் இராஜினாமா

வட இந்திய மானிலமான, உத்தர பிரதேசத்தின், அயோத்தியில், அமைந்திருந்த சர்ச்சைக்குரிய 16ம் நூற்றாண்டு கால, முஸ்லீம் பள்ளி வாசலை இந்து மத தீவிரவாதிகள் தகர்த்ததை அடுத்து, அம் மாநிலத்தின் முதலமைச்சர் கல்யாண் சிங் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

07.12.92

## கடல் பாதை திறக்கப்பட்டது

இரு வாரங்கள் பயப்பீதியின் காரணமாக மூடப்பட்டிருந்த கிளாலி- கடற்பாதையில், படகுகள் சேவைகளை ஆரம்பித்தன. பெருகி வந்த அப்பகுதி மீதான கடற்படைகளின் தாக்குதல்களில், 28.11.92ல் 6 படகுகள் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தின் பின்னர் அச்சத்தின் காரணமாக படகுச் சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்ட நாளே 100க்கணக்கானோர் இருபுறமும் பயணம் மேற்கொண்டுள்ளனர். குடாநாட்டுப் பகுதியில் இருந்து- வவுனியா ஊடாக கொழும்பு செல்வோர் தொகையும் அதிகரித்துள்ளது.

## யாழ்ப்பாணத்தில் பொறியியல் பீடம்

யாழ் பல்கலைக் கழகத்தில், பொறியியல் பீடம் ஆரம்பிப்பதற்கான முன் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழ் மாணவர்கள் இடம் பெயர்வதில் ஏற்படும் சிரமங்கள், பாதிப்புகள் குறித்த பல வருட முறையீடுகளை அடுத்து- கல்வியமைச்சு அனுமதியளித்து- இவ் ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

## தெரிவுக்குழு கூடி, முடிவின்றி கலைந்தது

கடந்த வாரம். கூடி தீர்வேதுமில்லாமல், இன்று மீண்டும் கூடிய பாராளுமன்ற தெரிவுக்குழு, இலங்கை இனப்பிரச்னை தீர்வில், சமஷ்டி முறை ஆட்சியை முன்மொழிய, மாகாண இணைப்புத் தடையாக, மீண்டும் கட்சிகளுக்கிடையே விவாதத்தை தூண்டிவிட்டுள்ளது. தமிழ்க் கட்சிகள், வட, கிழக்கு மாகாண இணைப்புடன் கூடிய சமஷ்டியை விடாப்பிடியாக வலியுறுத்த- முடிவேதும் காண முடியாத நிலையில் தெரிவுக்கு மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

8.12.92

## ஆதி கால வாழ்வில் இன்று மக்கள்

யாழ்ப்பாண மக்கள், மின்சார வசதியுமின்றி, எரிபொருள் வசதியுமின்றி ஆதி மனிதன் வாழ்க்கை நிலையில், வாழ்ந்து வருகின்றனர். ஆனால், அங்கு கச்சேரிகள், வங்கிகள், எப்படியோ செயற்படுகின்றன. பெரிய ஜெனரெட்டர்கள் மூலமாவது அப்பகுதிகளிற்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட பா.ம.உ. ஜோசப் பரராஜ சிங்கம், அரசைக் கேட்டுள்ளார்.

09.12.92

## தலையாட்டிகள் துணையுடன் தேடுதல் தீவிரம்

கொழும்பின் பல பகுதிகளில், இரவு வேளை திடீர் தேடுதல் நடவடிக்கைகள் நடைபெற்றன. விடுதிகள், வீடுகள், கடைகள், பொலீசாரின் முற்றுகைக்கு இலக்காக்கப்பட்டு, 2000ற்கு மேற்பட்ட தமிழ், ஆண், பெண்கள், விசாரணைக்காக, இரவோடிரவாக காவல் நிலையங்களிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கு முகமூடிகளுடன் காணப்பட்ட தலையாட்டிகளின் சைகளின் படி, சுமார் 400 பேர் மேலதிக விசாரணைகளிற்காக தடுத்து வைக்கப்பட்டு, ஏனையோர் விடுதலை செய்யப்பட்டனர்.

## பரீட்சை எழுதவிருந்தோர் பரிதவிப்பு

கொழும்பில் தேடுதலில் கைது செய்யப்பட்டோர் பலர், வட, கிழக்கில் இருந்து நடைபெற்று வரும் க.பொ.த. சாதாரண பரீட்சை எழுத, கொழும்பு சென்றவர்களாவர். தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதில், பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலையேற்பட்டு, இது பற்றி புகார்கள் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கல்வி இராஜாங்க அமைச்சர் இராஜமனோகரி புலேந்திரனின் தலையீட்டில், பல மாணவர்கள் மறுநாள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பொலீசாரின் தடுப்புக் காவலில், கடந்த இரண்டரை வருடங்களிற்கு மேலாக 900 தமிழ் இளைஞர்கள், சட்ட முன்னெடுப்புகளின்றி, அவசரகால விதிகளின் கீழ் தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ளார்களென்றும், தற்போதைய கைது நடவடிக்கைகளும், இன் நிலைக்கே வழி வகுக்குமென்றும், மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கண்டித்துள்ளார்.

10.12.92

## சமாதான ஊர்வலம் வன்முறையில் கலைந்தது

'உலக சமாதான தினம்' உலகின் பல்வேறு நாடுகளில், கொண்டாடப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு இலங்கையில், வன்முறைகளில் பாதிக்கப்பட்டோரின் நினைவாக, நவசமசமாஜக்கட்சி, தென்னிலங்கை, காணாமல் போனோர் பெற்றோர் சங்கமும் இணைந்து, சமாதான ஊர்வலமொன்றை கொழும்பில் ஆரம்பித்தன.

இவ் ஊர்வலத்தை தடுக்க முயன்ற பொலீசாரையும் மீறி, நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார தலைமையில், நடக்க முற்பட்ட 1000ற்கு மேற்பட்ட பொது மக்கள் மீது, சுமார் 200, பொலீசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை ஏவி வெடிக்க வைத்து- ஊர்வலத்தை கலைத்துள்ளனர். பலர் காயங்களுடன் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பொலீஸ் - இராணுவம் மோதல்?

அம்பாறை மாவட்டத்தில் கூட்டுரோந்துப் பணிகளில், அதிகார இணக்கங்களில், ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அங்குள்ள பொலீஸ் இராணுவ பிரிவினரிடையே மோதலை உருவாக்கும் நிலையை தோற்றுவித்துள்ளது.

விபரீதமாகாமல் நிலைமையை உடன் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் நோக்கில், கிழக்கு மாகாண இராணுவத் தளபதி உடன் அங்கு சென்றுள்ளார்.

## வீதி ஓர சடலங்கள்..

(லண்டன்)

ஒவ்வொரு வருடமும் உறைவிடமற்றவர்களில் சுமார் 200 பேர் லண்டன் வீதிகளில் சாவை அரவணைப்பதாக "கிறைசிஸ்" என்ற தரும ஸ்தாபனம் கூறியுள்ளது.

லண்டனிலே இரண்டாயிரத்துக்கும் அதிகமாக வீதி ஓரங்களில் தங்களின் வாழ்க்கையைக் களிக்கும் இவர்களது நிலை, பனிக்குளிர் காலத்தில் மிகவும் கவலைக்கிடமானது.

'கிறைசிஸ்' இன் தொண்டரொருவர் இறப்பவர்களில் காற்பங்கினர் தற்கொலை செய்வதாகவும் அநேகமாக முப்பதுகளில் உள்ள வயதுள்ளவர்கள் என்றும் உறைவிடமின்மை தான் லண்டனைப் பீடித்துள்ள பெரிய கொலையாளி என்றும் மனிதர்களின் வாழ்க்கை மட்டும் அழிப்பதுடன் நில்லாது அவர்களது உயிர்களையும் அழிக்கிறது என்றும் குறிப்பிட்டார். மூவரில் இரண்டு பேர்களிற்காவது, உறைவிடமிருந்தால், இந்த பரிதாபமான சாவிற்கு ஆளாகியிருக்க மாட்டார்கள் என்றார்.

இருபத்தைந்து வருடங்களாக இவர்களுக்கு உதவிவரும் இந்த தர்ம நிறுவனம், வரும் நத்தார் புதுவருட காலத்திலும், இவர்களுக்காக உணவு, படுக்கைகள் வழங்குவதில் முனைப்பாக ஈடுபட்டுள்ளது.

## புகைத்தல் தடை

(லண்டன் நிருபர்)

பிரிட்டிஸ் ரயில் தென்கிழக்குப் பிராந்தியத்தில் ஓடுகின்ற எல்லா ரயில்களிலும் புது வருடத்திலிருந்து புகைத்தலுக்கு தடை விதிப்பதாகவும், இது பெரும்பான்மையான பிரயாணிகளின் வேண்டுதலால் அமுல்படுத்தப்படுகின்றது என்றும் பிராந்திய பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

காலை அல்லது மாலை நெருக்கடி நேரங்களில் நான்கு லட்சத்துக்கு மேலானோர் பயணம் செய்யும் இந்தப் பிராந்தியத்திலுள்ள ரயில்களில் குறைந்தது ஒரு பெட்டியாவது புகைப்பவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தப் பெட்டிகளில் அசிங்கமான நிலையில், இந்தப் பெட்டிகளில் இருப்பதற்கு இடங்களிருந்தால் கூட புகைக்க முடியாத பெட்டிகளில் நின்றே பயணம் செய்யும் பல பயணிகளுக்கு இது ஒரு அளவற்ற மகிழ்ச்சியை கொடுக்கும் என்று தினமும் இந்த பிராந்தியத்தில் பயணம் செய்யும் ஒருவர் கூறினார்.

சமீபத்தில் மாகேற்றில் இருந்து வந்த ரயிலில் ஒரு அரை நிர்வாண ஜோடிக்கு தடுப்பு சொல்லாத சக பிரயாணிகள் அவர்கள் புகைக்கத் தொடங்கியதும் புகார் செய்யத் தொடங்கி விட்டார்களாம்.

## ஊட் கிறீன் பொதுச் சந்தையில் ஐ.ஆர்.ஏ. குண்டுவெடி

(லண்டன் டிச.10)

ஐந்து நிமிட இடைவெளிக்குள் இரண்டு குண்டுகள் வெடித்ததில் நான்கு பொலீசார் காயமுற்றதுடன் சிதறிய கண்ணாடிகளால் இருவர் பயங்கரமாக காயமடைந்தனர்.

லண்டன் மத்திய பகுதியில் பாதுகாப்பு மிகைப்படுத்தப்பட்டதால், சுற்றுப்புறப் பகுதிகளில் ஐ.ஆர்.ஏ. யினர் தாக்குதல் நடத்துகின்றனர் எனக் கூறப்படுகிறது. நேற்றைய தினம் ஊட் சைட் பார்க் "ரியூப்" புகையிரத நிலையத்துக்கு வெளியே உள்ள கார் பார்க்கிலும் ஒரு குண்டு வெடித்து பலத்த சேதம் ஏற்படுத்தியது.

பொலீசாருக்கு தகவல் கிடைத்த 15 நிமிடங்களில் காலை 9.30 மணிக்கு முதலாவது குண்டு டபிள்யூ.எச்.சிமித் இரண்டு மாடிக் கட்டடித்தின் முகப்பில் வெடித்தது. பொலீசார் மக்களை சந்தையில் இருந்து வெளியேற்றும் தருணத்தில் இரண்டாம் குண்டு வெடித்தது. காயப்பட்ட பொலீசாரில் ஒருவர் பெண்மணி என்றும் குறிப்பிடப்பட்டது. அதேவேளையில் நேற்று நடந்த குண்டு வெடிப்பில் பாவிக்கப்பட்ட வானின் விபரங்களை சேகரிக்க பொலீசார் இன்னமும் முயற்சிக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பெண்ணுரிமை

## சி.சிற்சபேசன்

.......சென்ற வார தொடர்ச்சி

சென்னையிலே ஒரு மூதாட்டியை சந்தித்தேன். அந்த அம்மையாருக்கு இருபதாவது அகவைக்கு முன்பாகவே திருமணமாகி நான்கு செல்வங்களை ஈன்று, ஐந்தாவது செல்வத்தை ஈன்ற சில காலத்திலேயே அம்மையாரின் இருபத்தி ஐந்தாவது அகவையிலே கணவன் நோய்வாய்ப்பட்டு இயற்கையெய்தினார். பூவையும் பொட்டையும் நீக்கி தலை மழித்து அம்மையாருக்கு விதவைக்கோலத்தை சுற்றத்தார் ஏற்படுத்திவிட்டனர். அம்மையார் தன்னுடைய ஐந்தாவது மழலைக்கு பாலூட்டச் சென்றபோது அப்பிஞ்சு தாயின் தோற்றத்தைக் கண்டு பயந்து உயிர்கொடுத்த அன்னையிடமே போக மறுத்து விட்டது. என்ன கொடுமை!

பால்ய விவாகம், விதவைக் கோலம் என்ற துன்பங்கட்கு சவால் விடுவதான முறையில் பரவிவரும் சமூக அமைவில் பெண்ணின் துயரங்கட்கு ஆண்தான் மூலகாரணம் என்பது பிரச்சாரத்துக்கு வேண்டுமானால் பயனுடையதாக அமையலாம், ஆனால் அதுவே உண்மையென்று ஆகிவிடாது. பெண்ணின் துயரங்கட்கு சக பெண்களே பெரும் பங்காளிகள் என்பது நடைமுறை நிகழ்வுகள் செப்பும் செய்தியாகும். பெண் தெய்வத்தை போற்றி வணங்கும் மானுடப் பெண்ணுக்கு தன்னுடைய சக பெண்ணொருத்தியை அதுவும் குறிப்பாக மருமகள் எனும் பெண்ணைக் காணும் போது காளி போன்ற ஆவேசமே வந்து விடுகின்றது. இந்தச் சிக்கலை மனோதத்துவ ரீதியில் நோக்குங்கால், மகன் மீது தனக்குள்ள ஆளுமை குறைந்து விடுமோ? கணவன் மீது ஆளுமையை ஏற்படுத்திக் கொள்ள முடியாதோ? என்ற அச்சம் தான் முதன்மைக் காரணமாக இருக்க முடியும் என்பதாகவே கருத வேண்டியிருக்கின்றது.

நோக்காமல் அவளை துன்புறுத்த வேண்டும் என்ற வகையினதாக ஆண்களில் பலருடைய மனம் ஏன் வக்கரித்துப் போனது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

படுத்தி நன்மக்களை ஈந்து அவர்கட்கு அன்பையும் பண்பையும் ஊட்டி சான்றோனாக்கும் பாரிய பொறுப்பும் பெருமையும் பெண்ணுடையதே! இதன் மூலம் உலகில் செழிப்பையும் சீர்மையையும் நிகழ்கால உண்மைகளாக்கும் செயற்பாட்டின் முக்கியமான பங்காளிகளும் பெண்களேயாம். "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்" என முப்பாலூல் பொழிந்த தெய்வப் புலவர் தாயின் மனநிலை எட்டக் கூடிய அளவிடற்கரிய உயரத்தினை உருவகப்படுத்த முனைந்திருக்கின்றார். குழந்தையை வளர்ப்பதில்

அமைந்து வருகின்றன. நிறைந்த பயன்களை தருவனவாக இல்லை. பெண்கள், சமூக அமைப்பில் முழுமையான வளர்ச்சியை நோக்கிய மாறுதல் செய்வதற்கு முனைய வேண்டும். தம் செல்வங்களை, அது ஆண் குழந்தையானால் பெண்ணையும், பெண்குழந்தையானால் ஆணையும் மதிக்கவும், சமநோக்கில் சமத்துவக் கண் கொண்டு பார்க்கவும், மனித நேயத்துடன் வாழ்வதற்கும் உரிய பயிற்சியை இளமையிலேயே அளிக்க வேண்டும். இஃதுதான், பெண் என்பவள் ஆண் என்பவனுடன் இணைந்து சமூக அமைப்புக்குச் செய்யக்கூடிய மிகச் சிறப்பான பங்களிப்பாகும்.

**பாஞ்சாலியின் துகிலுரிவதிலிருந்து இன்னோரன்ன கொடிய செயல்களைச் செயலாக்கும் துரியோதனன் என்னும் ஆண்மகனை படைத்த வியாசரின் எழுத்துத்தான், போர்கால விதிமுறைகட்கு ஏற்ப சூரிய மறைவுடன் ஆயுதப் பிரயோகத்தை நிறுத்தி தர்மத்ததை கடைப்பிடித்த கர்ணனையும் படைத்திருக்கின்றது.**



மிக கொடூரமான செயல் பெண் சிசு அழிப்பு– கொலை செயற்பாடாகும். இஃது தமிழ்நாட்டில் இந்தக் காலப் பகுதியில் தொற்று நோய் போன்று பரவிவருவதாக ஆதாரபூர்வமான செய்திகள் எடுத்துரைக்கின்றன. "ஒன்றுக்கு மேல் இப்போது வேண்டாம். இரண்டுக்குமேல் எப்போதும் வேண்டாம்" என்ற நாடாள்வோரின் குடும்பதிட்டமிடல் பிரச்சாரத்தை மக்கள் காற்றிலே பறக்க விட்டு விடுகிறார்கள். ஆனால் அதற்கு பிராயச்சித்தம் செய்வதாக எண்ணியோ என்னவோ, "பெண் குழந்தையா? வேண்டவே வேண்டாம்" என்ற கொள்கையை திரைமறைவில் ஏற்படுத்தி அதன்படி செயற்பட்டும் வருகின்றார்கள். இந்த கொள்கையை பொறுத்தவரை மேட்டுக்குடி கீழ்க்குடி என்ற வர்க்க பேதங்களை மறந்து எல்லோரும் ஒன்றுபட்டிருக்கிறார்கள் என்பது கவனிக்கப்படவேண்டியது. கொள்கையில் மட்டுமேதான் ஒற்றுமை, செயலாக்குவதில் துருவநிலை வேறுபாடுகள்.

கர்ப்பத்தில் இருக்கும் சேயானாறை தெரிந்து கொள்ள பயன்படுத்தப்படும் மருத்துவ செயன்முறையானது– இக்காலப்பகுதிகளில் பெண்கருவை அழிப்பதற்கு பரவலான சந்தர்ப்பங்களில் பயன் படுத்தப்படுகின்றது. இது கெளரவமானது. மேட்டுக் குடிமக்கள் பயன்படுத்துகின்றார்கள். எளிதில் வெளிஉலகம் தெரிந்து கொள்ள முடிவதில்லை.

கீழ்க்குடி மக்களைப் பொறுத்தவரை இப்படியான "கெளரவமான" செயற்பாடுகட்கு அவர்களது பொருளாதார நிலைப்பாடுகள் இடம் கொடுப்பதில்லை. கொண்ட கொள்கையில் உறுதியுடையவர்கள் அல்லவா? பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தையை, அஃது பெண்ணாக இருப்பின் கொலை செய்துவிடுவது பரவலாக நடைபெறுகின்றது.

இந்த செயற்பாடு பெண்ணுக்கு இழைக்கப்படும் அநீதிகட்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்றதாகும். இந்த அநீதியான செயலுக்கு பெண்களும் உடந்தையாக இருக்கிறார்கள் என்பதுதான் மிகுந்த வேதனையைத் தருகின்றது.

### சமூக கள நிலைப்பாடுகள்

இருளும் ஒளியும், வெம்மையும் குளிர்மையும் எவ்வளவு இயற்கையானதோ அவ்வளவு உண்மையானது சமூகத்தில் நிலவும் ஆரோகண அவரோகணங்களாகும். வல்லடியாக, வன்மையாக, சாந்தமாக, பெருந்தன்மையாக என்று மாறுபட்ட குணநலன்களை கொண்டவர்கள் ஆண்– பெண் என்ற இருபாலரிடமும் உள்ளனர். ஆணை அடவாடியாகவும் பெண்ணை சாந்தமாகவும் வர்ணிப்பது தமிழ் கலாச்சாரத்தின் உள்ளடக்கத்தையும் தமிழ் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களையும் படம் பிடித்து காட்டுகின்றன.

பாஞ்சாலியின் துகிலுரிவதிலிருந்து இன்னோரன்ன கொடிய செயல்களைச் செயலாக்கும் துரியோதனன் என்னும் ஆண்மகனை படைத்த வியாசரின் எழுத்துத்தான், போர்கால விதிமுறைகட்கு ஏற்ப சூரிய மறைவுடன் ஆயுதப் பிரயோகத்தை நிறுத்தி தர்மத்தை கடைப்பிடித்த கர்ணனையும் படைத்திருக்கின்றது. சாந்தமாகவும் பெருந்தன்மையுடனும் வலம் வந்த கண்ணகி தன் கணவன் தவறிழையாமல் தண்டிக்கப்படுகின்றான் என்றபோது மதுரை நகரையே தீக்கிரையாக்குகின்றாள். ஆண்– பெண்ணின் பால் தன்மைகட்கு அப்பாற்பட்டதாக காணப்படும் குண இயல்புகளின் வேறுபாடுகளை "இருதுருவ" பாத்திர படைப்பின் மூலம் வியாசரும் இளங்கோவடிகளும் தெளிவாக்குகின்றார்கள். ஆக, குண இயல்புகளை பொதுப்படையாக ஒரு பாலினரின் மேல் திணித்து அடையாளம் ஏற்படுத்திவிடுவது சிறப்பான செயன்முறை அல்ல என்பது தெளிவு.

### சமூக வளர்ச்சியில் பெண்ணின் பங்களிப்பு

பெண்ணை சமநோக்குடன்

அவனுடைய "கடினத்" தன்மை கொண்டுவிட்ட மனத்துக்கு காரணமாக அங்கே ஒளிந்திருப்பவளும் ஒரு பெண்தான் என்பது நடுநிலையுடன் நோக்குங்கால் தெளிவாகும். யார் அந்தப் பெண்? வேறுயாருமல்ல அவளை இந்த உலகுக்கு அறிமுகம் செய்து வைத்த அன்னை தான் அந்தப் பெண்ணாகும். கணவன் போர் களத்தில் இறந்த செய்தி கேட்டு, பால்மணம் மாறாத தன்னுடைய ஒரே பாலகனை தலைவாரி சிங்காரித்து போர்களம் அனுப்புகின்றாள் தமிழ்த்தாய் என்பது வரலாறு. போர்களத்தில் மகன் இறந்துபட்ட செய்தி கேட்டபோது நெஞ்சிலா? முதுகிலா? காயம் என வினவுகின்றாள். முதுகில் என்று அறிகின்றாள். துடிக்கின்றாள். கோழைக்கா பால் கொடுத்தேன். அவன் குடித்த மார்புகளை அறுத்து எறிகின்றேன் என்று சபதம் செய்கின்றாள். போர்களம் விரைகின்றாள். அவன் நெஞ்சிலே காயம் பட்டு இறந்து கிடப்பதை காண்கின்றாள். ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கின்றாள். இஃது புறநானூறு சொல்லும் செய்தியாகும்.

தமிழ் அன்னை வீரத்தையும் பண்பையும் ஊட்டியே தனது செல்வங்களை வளர்க்கின்றாள் என்று சொல்கின்றோம். அப்படியாயின் மனித நேயச்சரிவு எங்கே ஏற்படுகின்றது. வரலாற்றுக் காலத்துக்கும் இன்றைய நவீன காலத்துக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இந்தச் சரிவு ஆரம்பமாகியிருக்கலாம் என்றே கருத வேண்டியிருக்கின்றது.

பெண்களை துயருறச் செய்வது ஆண் என்றால் அந்த ஆண்மகனை வளர்த்து மனிதனாக்குவது தாய் எனப்படும் பெண்தான். கணவன் சார்ந்து குடும்ப வளர்ச்சியை ஏற்

தாய்க்கு மட்டுந்தானா பொறுப்பு என்ற அமைதியான முணுமுணுப்பை கேட்கக்கூடியதாக உள்ளது. தாயினுடைய மட்டுமே முழுமையான பங்களிப்பு என்ற அறிவு பூர்வமற்ற கருத்தை முன்வைப்பதும், தாயின் பங்களிப்பின் உயர்வை "சாதாரண அளவுகோல்கள்" உதவியுடன் அளவிடுவதும் நோக்கமுமல்ல. குழந்தையை பொறுத்தவரை தாயினுடைய தொடர்பு உண்மையானது; நிலையானது– சிறப்பு வாய்ந்தது. தாயைப் போன்று பிள்ளை நூலைப் போன்று சேலை என்பதை தமிழ் முன்னோடிகள் தெளிவுடன் சொல்லியிருக்கிறார்கள். இஃது ஒன்றே தாயின் சிறப்பை படம்பிடித்துக் காட்டிவிடுகின்றது என்பது நிதர்சனம்.

இன்றைய சமூக அமைப்பில் பெண் உரிமைக்கு போராட்ட குரல்கள் நிறையவே எழுப்படுகின்றன. மாலை நேரச் சொற்பொழிவுகளில் ஆண் ஆதிக்க தலைகளை அறுப்போம் என்ற முழக்கங்கள் கேட்கின்றன. இவையெல்லாம் பெருமளவில் விளம்பர செயற்பாடாகவே

### இன்றைய பெண்ணுரிமை இயக்கம்: ஒரு பார்வை

மானிடர்களில் ஆண்– பெண் வேறுபாடு என்ன?

இருவரும் ஒன்றுதான். ஆண் செய்யும் காரியங்கள் எல்லாம் பெண் செய்தல் வேண்டும். அவனுடைய இடத்திலிருந்து அவன் தூக்கியெறியப்பட வேண்டும். இப்படியான வசனங்களை முழங்கி, கண்ணைக் கட்டிவிட்ட குதிரையாய் கங்கணத்தோடும் ஆவேசத்துடனும் மூர்க்கத்தனத்துடன் பாய்ந்து வருவதாகவே இன்றைய பெண்ணுரிமை இயக்கம் செயற்பட்டுவருகின்றது.

இன்றைய பெண்ணுரிமை இயக்கம் சார்ந்த வாதத்தின் இன்னுமொரு பரிமாணம் மிகுந்த வேதனையை ஏற்படுத்துகின்றது. கிழக்கு நாடுகளைப் பின்புலங்களாகக் கொண்டவர்கள் மேற்கு நாகரீக அலைகளில் சிக்குண்டு தம்முடைய கலாச்சார அடையாளங்களை தகர்க்க முனைகின்றார்கள். அழகு என்பது செயற்கையான வண்ணப் பூச்சுகளால் மட்டுமே அமைந்து விடுவதில்லை என்பதை ஏனோ உணர மறுக்கிறார்கள். அலங்காரம் செய்து கொள்வதென்பது பெண்ணுரிமையின் அடையாளம், அதுவே பெண்ணுரிமை இயக்கத்தின் வெளிப்படையான வெற்றி என்பவையான நிலைப்பாடுகள் பரவலாகவே ஏற்பட்டுள்ளது. ஆண்– பெண் சமமானவர்கள் என்ற கோட்பாட்டை நிலைநிறுத்த முற்படுபவர்கள், இப்படியான ஓர் "கவர்ச்சி விளம்பர" யுக்தியில் ஈடுபடுவது சொல்லுக்கும் செயலுக்குமிடையேயுள்ள தொடர்பின்மையையே வெளிப்படுத்துகின்றது. கல்வியில் உயர்ந்து, கலைகளில் சிறந்து, குடும்பத்தை செம்மைப்படுத்தி நாளைய நல்லுலகுக்கு வழிசமைக்க வேண்டிய சிற்பியே பெண். அவள், கடலினும் பெரிய தனது விழியோரங்களில் மைதீட்டி உதடுகளில் சாயம் பூசி கரமுடைத்திக் கொண்டு, வலையாகக்கிச் சுழற்றிக் கொண்டு காமச் சந்தையிலே தன்னையே கடைபரப்பி கூவிவிற்கும் கொடுமையை கண்ணுறும்போது நெஞ்சம் மிதமிஞ்சிய துயரால் துன்புறுகின்றது. இப்படியான கொடிய செயற்பாடுகள்தான் பெண்ணுரிமையின் வெற்றி எனில், அந்த விதமான நிலைப்பாட்டை எமது தமிழ் சகோதரிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது துணிபு.

**இன்றைய சமூக அமைப்பில் பெண் உரிமைக்கு போராட்ட குரல்கள் நிறையவே எழுப்படுகின்றன. மாலை நேரச் சொற்பொழிவுகளில் ஆண் ஆதிக்க தலைகளை அறுப்போம் என்ற முழக்கங்கள் கேட்கின்றன. இவையெல்லாம் பெருமளவில் விளம்பர செயற்பாடாகவே அமைந்து வருகின்றன.**

### இந்திய நாகரீகத்தில் பெண்

பெண்ணுரிமை இயக்கங்கள்

(8ம் பக்கம் பார்க்க).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழோசை

லண்டன் டிசம்பர் 11, 1992

# பாரதம்

## அன்று

தந்தை கொடுத்த வரம் காக்க, சிற்றன்னையின் விருப்பப்படியே, பரதனுக்கு முடி கொடுத்து வனவாசம் ஏகிய ராமர் அவதரித்த நாடு.

அண்ணனது பாதுகைகளை அரியணை ஏற்றி, மணி முடிசூட்டி, அவனது வருகை பார்த்து அரசாண்ட பரதன் வாழ்ந்த நாடு.

தன்னையே சூதில் இழந்து விட்ட அண்ணன் தருமரின் சொல் தட்டாமல் வனவாசம் சென்ற வீமன், அர்ச்சுணன், நகுலன், சகாதேவன் ஆண்ட நாடு.

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று மூவாயிரம் ஆண்டுகட்கு முன், மதச்சார்பில்லாமல், காலங்களால் அழிக்கப்பட முடியாத திருக்குறள் எனும் காவியம் படைத்த திருவள்ளுவரின் நாடு.

அகிம்சையின் கோட்பாடுகளை உலகுக்கு எடுத்துக் காட்டிய மகாத்மா பிறந்த நாடு.

"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!
நீதி உயர்ந்த மதி, கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்"

என்று பாடிய பாரதியார் பிறந்த நாடு.

சமதர்மம் வேண்டி துறவறம் பூண்ட புத்தரை பெற்றெடுத்த நாடு.

கன்றை தேர்சில்லில் இழந்த பசுவின் மணியொலி கேட்டு, தன் மகன் மேல் தேரோட்டி நீதிகண்ட சோழன் வாழ்ந்த நாடு.

## இன்று

ராமர் அவதரித்த நாட்டில், ராமரின் பெயரால், அழிவு நோக்கி அடியெடுத்து, பணம், பட்டம், பெயர், பதவி என்று மோகத்தினால் உந்தப்பட்டு, அண்ணனுக்கெதிராக தம்பியையும், நண்பனுக்கெதிராக நண்பனையும், இரத்தக் கடலில் மிதக்கவிட்டு, மதங்களின் பெயரால், ஜாதியின் பெயரால், சுயமேம்பாட்டுக்காக மனிதப்பலி கொடுக்கும் சந்தர்ப்ப வாதிகளும் பிறந்து வளர்கிறார்கள், வாழ்கிறார்கள்.

தெருவில் அனாதையாக இறந்தவனை வைத்து, துண்டுபோட்டு பணம் சேர்க்கும் துச்சர்களும் வளர்கிறார்கள், வாழ்கிறார்கள்.

கடவுள் இந்த இன்னல்கள் தீர்க்க அவதாரம் எடுத்தால், கடவுளைக்கூட, கட் - அவுட் போட்டு வாழ நினைக்கும் அற்ப பிறவிகள். வளர்கிறார்கள், வாழ்கிறார்கள்.

புத்தர் வந்த திசையிலே போர்!
புனித காந்தி மண்ணிலே போர்!
சத்தியத்தின் நிழலிலே போர்!
தர்மத்தாயின் மண்ணிலே போர்!
-கண்ணதாசன் என்றோ பாடியது.

ஆண்டாண்டு காலமாக அடிமைத்தனம் போதித்து ஆண்டு வரும் இந்த இனம் கூண்டோடு ஒழிவதற்கு,
என்று "தணியும் இந்த மோகத்தின் தாகம்".

# மாதிரி சட்டமன்றத்தை இலக்கியமயமாக்கிய கண்ணதாசன்

நெல்லை மாவட்ட கவியரசர் கண்ணதாசன் நற்பணி மன்ற முதலாம் ஆண்டு விழாவில் புதுமையும், சுவையும் நிறைந்த மாதிரி சட்டமன்ற நிகழ்ச்சி நடைபெற்றது.

முன்னாள் அரசு தலைமை செயலாளர் லட்சுமிகாந்தன் பாரதி தலைமை தாங்கி, மக்கள் கவிஞர் அருநாகப்பனை சட்டப்பேரவை தலைவராகப் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

ஆளுங்கட்சி அணித் தலைவியாக செல்வி.சரசுவதியும் ஆளுங்கட்சி உறுப்பினர்களாக பேராசிரியர் துரைசிவானந்தம், கவிஞர் ஸ்ரீதரன், முகவூர் முத்துமணி ஆகியோரும் பொறுப்பேற்றார்கள்.

எதிர் அணியில் கீதைச் செல்வர் சாது.சாரங்கபாணி, அந்திப்புலவர் குறள்பித்தன், செங்கோட்டை ஜனார்த்தனன் ஆகியோர் பங்கேற்றனர்.

"திரைக்கூடத்தை இலக்கியகளமாக்கியவர் கவிஞர் கண்ணதாசனே" என்ற தீர்மானம் ஆளுங்கட்சி தரப்பில் முன்மொழியப்பட்டது. இத்தீர்மானத்தை ஆதரித்தும் எதிர்த்தும் கடுமையான விவாதம் சட்டமன்றத்தில் நடைபெற்றது.

சபாநாயகர் அரு.நாகப்பன் விவாதத்தை ஆரம்பித்து வைத்தார். அது வருமாறு:-

இன்றைய சட்டமன்றத்தில்அம்மா கட்சிதான் ஆளும் அணி எதிர்க் கட்சியில் 3 பேர்தான் இருக்கிறார்கள், ஆனாலும் கடுமையானவர்கள்.

இப்போது ஆளும் அணித் தலைவி செல்வி (சரசுவதி)யை மிகப்பணிவோடு வணங்கி பேச அழைக்கிறேன்.

(சரசுவதி பேச எழுந்ததும் சபாநாயகரும் இருக்கையிலிருந்து எழுந்து காலில் விழுவது போன்று பாவனை செய்துவிட்டு அமருகிறார்.)

செல்வி சரசுவதி:-

கண்ணதாசன் ஒரு தீர்க்கதரிசி அதனால்தான் "சேடப்பட்டி சிங்கக் குட்டி" என்று அந்தக் காலத்திலேயே பாட்டு எழுதியிருக்கிறார். திரைக் கூடத்தை இலக்கிய களமாக்கியவர் அவர் ஒருவரே!

இந்தக் காலத்தில் "ராக்கம்மா கையத்தட்டு. சாந்து சக்கடி. சாந்து சக்கடி" என்று பாட்டு எழுதுகிறார்கள.(சபாநாயகரைப் பார்த்து) சாந்து சக்கடி" என்றால் என்ன பொருள்?

சபாநாயகர்:- என்னைப் பார்த்து எதுவும் கேட்கக் கூடாது. ஏனென்றால் எனக்கு எதுவுமே தெரியாது.

சரசுவதி:- மனிதனுக்காக அன்று பாடினார் கண்ணதாசன். இன்று மாட்டுக்காகப் பாடுகிறார்கள். "சொன்னபடி கேளு. மக்கர் பண்ணாதே" இப்படியும் ஒரு பாடல்.

சபாநாயகர்:- மனிதனுக்குச் சொல்லிப் பார்த்து விட்டோம். கேட்கவில்லை. மாடாவது கேட்கட்டுமே என்று எழுதலாம் அல்லவா?

சரசுவதி:- காதலையும் தத்துவத்தையும் ஒன்றாக ஒரே பாடலில் வைத்து எழுதியவர் கண்ணதாசன். "கட்டோடு குழலாட ஆட" என்ற பாட்டில் "தென்னமரத் தோப்பாக தேவாரப்பாட்டாக" என்று எழுதினார். தேவாரம், திருவாசகம் போன்றவற்றை மக்களின் மனதில் இனிமையான பாடல்கள் மூலம் பதித்தவர் கண்ணதாசன்.

சபாநாயகர்:- இன்றைய மாணவர்களிடம் 'தேவாரம்' தெரியுமா என்று கேட்டால் ஓ.. தெரியுமே! பெரிய மீசைக்காரர் தலையில் தொப்பி வைத்து இருப்பார்... என்று பொலீஸ் ஐ.ஜி.யைச் சொல்கிறார்களே!

சரசுவதி:- காதல், தத்துவம், பக்தி என்று அனைத்து பாடல்களிலும் இலக்கியம் படைத்தவர் கண்ணதாசன் ஒருவர் தான். இன்றைய கவிஞர்கள் "கறுத்த மச்சான்!... பருத்திக்குள்ள பஞ்சு வச்சான்" என்று பாட்டு எழுதிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, திரைக்கூடத்தை இலக்கிய களமாக்கியவர் கண்ணதாசன் ஒருவரே என்ற எங்களது தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

சபாநாயகர்:- எதிரணியின் தலைவர் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் சாது. சாரங்க பாணியை பேச அழைக்கிறேன்.

சாது.சங்கரபாணி:- நக்கீரன் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நாங்கள். யார் செய்தாலும் குற்றம் குற்றமே. நாங்கள் மூவராக இருப்பதால் பேசாமல் இருக்க மாட்டோம். சபாநாயகர் ஆளுங்கட்சிக்கு ஆதர



வாக இருந்து எங்களிடம் பாரபட்சமாக நடக்க கூடாது.

கண்ணதாசன் திரை உலகிற்கு வருவதற்கு முன்பே தண்டபாணி தேசிகர், எம்.கே.டி.பாகவதர், கிட்டப்பா, கே.பி.சுந்தராம்பாள் ஆகியோருடைய இனிய பாடல்களைக் கேட்டு இருக்கிறோம். பாபநாசம் சிவன், உடுமலை நாராயண கவி போன்றோர் அழகான பாடல்களை பாடி இருக்கிறார்கள்.

கண்ணதாசனுக்குப் பின்பு வந்த மருதகாசி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், தஞ்சை ராமையா தாஸ், வாலி ஆகியோரது பாடல்களிலும் நல்ல கருத்தும், நயமும் உண்டு.

கண்ணதாசனைத் தவிர மற்றவர்கள் எல்லாம் மோசமான பாட்டுக்களையே எழுதியிருப்பதாக கூறினார்கள். இதை நாங்கள் எதிர்க்கிறோம். மறுக்கிறோம். திரைக் கூடத்தை இலக்கிய களமாக்கியவர்களில் கண்ணதாசனும் ஒருவர். அதுதான் எங்களது திருத்த தீர்மானம். உடுமலை நாராயணகவி எழுதிய 'விண்ணேடும் முகிலோடும் விளையாடும் வெண்ணிலவே" என்ற பாடல் இலக்கியமாகத் தெரியவில்லையா? (பலத்த கையொலிகளுக் கிடையே பாடலைப் பாடிக் காட்டினார்.)

அடுத்து ஆளும் அணியைச் சேர்ந்த குன்னத்தூர் பேராசிரியர் துரை.சிவானந்தம் பேசியதாவது:-

சபாநாயகர் அவர்களே, நீங்கள் தலைவியின் தயவால்தான் இந்தப் பதவிக்கு வந்து இருக்கிறீர்கள். அதை உணர்ந்த நடந்து கொள்ள வேண்டும். எதிரணியில் இருக்கும் மூவரில் ஒருவர் எங்கள் அணிக்கு வரச் சம்மதம் தெரிவித்து விட்டார். அதற்கான பேரம் எல்லாம் முடிந்து விட்டது.

எதிரணி குறள்பித்தன் குறுக்கிட்டு:- சபாநாயகர் அவர்களே, கட்சித்தாவல் தடைச் சட்டத்திற்கு எதிராக சட்டமன்றத்திற்குள்ளேயே ஆளுங்கட்சி உறுப்பினர் பேசுகிறார். இது முறையா?

சபாநாயகர்:- மூன்றில் ஒரு பங்கு கட்சி மாறினால் தவறு இல்லை.

குறள்பித்தன்:- சட்டி சுட்டதடா? கைவிட்டதடா என்று கவிஞர் பாடியது உங்களுக்காகத்தான். "தடா" நினைவிருக்கட்டும்.

ஆளும் கட்சி சிவானந்தம்:- திரைக்கூடத்தை இலக்கிய களம் ஆக்குவதற்காகவே கண்ணதாசன் மாலையிட்ட மங்கை, சிவகங்கைச் சீமை போன்ற சொந்தப் படங்களைத் தயாரித்து அதில் 17-க்கும் அதிகமான பாடல்களை வைத்தார். ஆயிழை, அங்கையற் கண்ணி போன்ற இலக்கியச் சொற்களை எல்லாம் வைத்து பாடல்கள் பாடினார்.

வீட்டுக்கு ஒருமரம் வளர்ப்போம் என்று அரசு சொல்லி வருகிறது. இதை முன்பே வலிபுறுத்தி பாடல் எழுதியவர் கண்ணதாசன்.

நாடு அதை நாடு. நாடாவிட்டால் ஏது வீடு? என்று நாட்டுப் பற்றை வளர்க்கும் பாடல்களை அவர் எழுதி இருக்கிறார். "காடு கொடுத்த கனி இருக்கு" என்று இயற்கை அழகு சொட்டும் பாடல் எழுதினார்.

தாலாட்டுப் பாடலில் கூட காதல் கவிதை இலக்கியம் படைத்தவர் கண்ணதாசன். "காதல் என்னும் கவிதை கொன்னேன் கட்டிலின் மேலே அந்தக் கருணைக்கு நான் பரிசு தந்தேன். தொட்டிலின் மேலே"... என்பது போன்ற பாடலை இப்போது கேட்க முடிகிறதா!

இப்போது "கும்தாலக்கடி கும்தாலக்கடி பாட்டு என்று தான் கேட்க முடிகிறது. கண்ணதாசன் மீண்டும் பிறந்த வந்து கவிதை எழுதக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று ஒரு கவிஞரே கேட்டுள்ளார்.

எதிரணி குறள் பித்தன்:- ஒரு பெண்ணின் பின்னால் நீங்கள் நின்று கொண்டு...

துரைசிவானந்தம்:- அவர் பெண் அல்ல. எங்கள் இதய தெய்வம். (துரை சிவானந்தமும், சபாநாயகரும் சேர்ந்து ஆளும் அணித் தலைவி செல்வி சரசுவதியைக் கும்பிடுகிறார்கள்)

குறள்பித்தன்:- போகிற போக்கை பார்த்தால் காலில் விழுந்தே கும்பிட்டு விடுவீர்களோ?

சபாநாயகர்:- எங்களைச் சோதிக்கிற அளவுக்கு நீங்கள் எதுவும் பேச வேண்டாம்.

குறள்பித்தன்:- கண்ணதாசன் வருவதற்கு முன்பு இலக்கியமே இல்லை என்று பேசுவதை ஒப்புக் கொள்ள முடியாது. "அன்னையும் தந்தையும் தானே" என்று அன்று பாகவதர் பாடியது இலக்கியம் இல்லையா?

(ஆளும் அணித் தலைவியைப் பார்த்து கையை நீட்டி) எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே"

செல்வி சரசுவதி:- எங்களை பார்த்துக் கை நீட்டி, எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் என்று எப்படிப் பாடலாம்?

குறள்பித்தன்:- நான் பாடவில்லை. அன்றே எம்.ஜி.ஆ. பாடியிருக்கிறார். மலைக் கள்ளனில்!

அது மட்டுமல்ல. "ஏச்சிப் பிழைக்கும் தொழிலே சரிதானா? எண்ணிப்பாருங்க" ஐயா, எண்ணிப் பாருங்க. பூச்சியப்பா போக்கரி சுப்பா.

துரைசிவானந்தம்:- அது எங்களைத்தான் பாடியது.

சபாநாயகர்:- ஆமாம் ஆமாம்

குறள்பித்தன்:- மதுரை வீரனில் எம்.ஜி.ஆர், பாடினார் தஞ்சை ராமையாதாசின் இந்தப் பாடல்கள் இலக்கியம் இல்லையா! மேலும் "சின்னப்பயலே சின்னப்பயலே சேதி கேளடா"

சரசுவதி:- எங்கள் அணியில் உள்ளவர்களைச் சின்னப்பயல் என்று எப்படிக் கூறலாம்?

குறள்பித்தன்:- நாங்கள் பேசும் போது ஆளும் அணித்தலைவி அடிக்கடி குறுக்கிடுகிறார். சபாநாயகர் ஆளும் கட்சிக்கு அதிக அதிகாரம் கொடுக்க கூடாது. (அவரோடு சேர்ந்து சாது சாரங்கபாணியும் சப்தமாகப் பேசுகிறார்)

சபாநாயகர்:- (சரசுவதியைப் பார்த்து):- அம்மா, உங்கள் தயவால் கிடைத்தது. இந்தப் பதவி. ஆகவே நீங்கள் சொல்வது எல்லாம் சரிதான்.

செல்வி சரசுவதி (எதிரணியைப்

(8ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# SHANKAR

## நத்தார், புதுவருட, பொங்கல்

பண்டிகைகளை முன்னிட்டு

## 01-12-1992 முதல் 15-01-1993 வரை

விஷேட

# மலிவு விற்பனை

## தமிழ்த்திரைப்பட AUDIO, CD ஆகியன மொத்த விற்பனை விலையில்

அத்துடன்

## இலங்கைத் தயாரிப்புகள்

பதனிடப்பட்ட மீன் வகைகள், மரக்கறி வகைகள், அரிசி மா, மிளகாய்த்தூள், சகலவிதமான பலசரக்குப் பொருட்கள்

என்பவற்றுக்கு

## லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்

# SHANKAR & CO LTD

231 NORTHOLT ROAD, SOUTH HARROW, MIDDLESEX, U.K.

PHONE: 081 426 8960 FAX: 081-861 5248

www.tamilarangam.net

# காலம் உனக்கொரு பாட்டெழுதும்

ஜனனி

சிறுகதை

வெகுநாட்களுக்குப் பிறகு இன்று குளியல். இன்றையப் போதின் உதயகாலமே புதிய தோற்றத்துடன் எழுந்தது. மிகவும் வித்தியாசமாக, ஒரு சித்திரை மாதத்தின் கதகதப்பான விடியலாக இன்றிச் சற்றே குளிருட்டியபடி. ஒவ்வொரு மயிர்க் காலிலும் நுழைந்து கிச்சு கிச்சு மூட்டுகிற குளிர்.

இளவெயிலில் பசைபரவிய பெருமிலைகளை விரித்துக் காட்டியபடி, எங்கு பார்த்தாலும் புகையிலைத் தோட்டங்கள் தெரிந்தன. கனவேகமாக நீரை உமிழ்ந்து கொண்டிருந்தன வாட்டர் பம்ப்புகள். புகையிலையின் இனிய மயக்கந்தரும் நெடியுடன் சேர்ந்து மண்ணெண்ணெய் எரிந்துபோகிற புகை கதம்பமாக மணத்தது.

அருளுக்குத்தான் முதலில் ஐடியா வந்தது. சட்டென எழுந்துபோய் சேட்டைக் கூட கழற்றாமல் தலைவழி நீர் சொரியுமாறு குத்துக் காலிட்டு உட்கார்ந்து விட்டான். எல்லாரும் கோணாமலையைத் திரும்பிக் கேள்வியோ[illegible] பார்த்தார்கள். கோணாம[illegible]க்கு ஏன் எந்த நேரமும் சிவந்தே போயிருக்கின்றன கண்கள்? இறுக மூடிய மெல்லிய உதடுகளுக்குள் எப்போதும் கோபமும் ரோஷமும் ஒளிந்திருப்பதாகத் தோன்றும்.முகம் கருங்கல்லு மாதிரி விசித்திரமானதொரு பளபளப்புடன் கடினமாகவிருக்கும்.

கோணாமலை இன்று காலை சிவந்த கண்களால் சிரித்தான். 'பொளபொள' வெனப் பாய்கின்ற நீர்த்தாரையில் ஒருசிறு குழந்தை மாதிரி தலையை உதைத்துக் கொண்டிருந்த அருளை ஒரு தந்தையின் கனிவுடன் பார்த்தான்.

"ஓராள் கடைசியிலை குளிக்கலாம்"

அப்பா! இது என்ன குரல்? பேசாத வாய் பேசுகிற போது ஒவ்வொரு சொல்லிலும் மிகுந்த அழுத்தம் தெரிகின்றது.

மைக்கேல் உட்கார்ந்தான்.

கோணாமலை, கேதாரி, பெரியண்ணன், பெருமாள், யோசேப், அன்பரசன், பிறகு இவன்... எல்லோரும் உறுமிக்கொண்டிருந்த வாட்டர்பம்பை நோக்கிப் போனார்கள்.

மைக்கேல் செய்திகளை சேகரிக்க உட்கார்ந்திருந்தான்.

சனங்கள் இவர்களை ஒருதரம் நிமிர்ந்து பார்த்தார்கள்.பிறகு தலையைக் குலுக்கிக் கொண்டு தம்பாட்டில் வேலையில் ஆழ்ந்தார்கள் பத்தோ பன்னிரண்டோ வயதிருக்கும், ஒரு சிறுபையன் கையில் சோப்புப்பெட்டி குலுங்க இவர்களை நெருங்கி ஓடிவந்தான்.நீட்டிய படியே நின்றான். இவர்கள் சட்டை செய்யாதவர்களென உடம்பைத் தேய்த்துக் கொண்டிருந்தார்கள்.

கோணாமலை நிமிர்ந்து பார்த்தான். பையனின் விழிகள் "வாங்கிக் கொள்.... வாங்கிக்கொள்" எனக் கெஞ்சும் பாவனை காட்டின.

"அருள் சோப்பை வாங்கு"

அருள் தலை, தோள், தொப்புள், தொடை, பாதம் எங்கும் சோப்பு நுரை பொங்கி வழிய இளிக்க வாரம்பித்தான். அருள் கொஞ்சம் குஷாலான பேர்வழி. இவனுக்கு அந்தரங்கம் எல்லாம் சொல்லுவான். ஒருமுறை இவனும் அருளும் சைக்கிளில் டபிள் அடித்தக்கொண்டு அவசர அலுவலாகப் போனார்கள். சீமைக்கிழுவை மரங்கள் பூத்திருந்த ஒரு உயரவேலிக்குப் பின்னே கம்பீரமாக உயர்ந்து தெரிந்த ஒரு வீட்டுக்கு முன்னால் போகையில் அருள் இவன் விலாவில் இடித்தான்.

"என்ரை ஆளின்ரை வீடு..." எனக் காதினுள் கிசுகிசுத்தான்.

".........."

"எப்பிடி வீடு.....?"

"வீடு ... நல்லாகத்தான் இருக்கு...."

"ஆளை நீ பாக்கலை.... பார்தாலெல்லோ தெரியும்!....."

"....."

"ஹும்..... எல்லாம் நல்லபடியா முடிஞ்சு.... நானும் உயிரோட இருந்தா......"

"இருந்தா?....."

"ஹும்....."

இவன் திரும்பி அருளின், முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். லோக சௌந்தர்யங்கள் யாவும் அருளின் இறுகிய முகத்தில் ஒரு வினாடி பூத்திருக்கக் கண்டான்.

இவனும் அருளுக்காக ஒரு பெருமூச்சை உதிர்த்தான்.

ஒரு கணம்தான்!

பிறகு அருள் மாறிவிட்டான். கண்களில் பழைய இறுக்கம் பரவியது. கால்கள் கனவேகமாக சைக்கிளை உழக்க வாரம்பித்தன. ஒரு

உண்மையான ஊழியன்! வெகு காலத்திற்குப் பிறகு, இன்று அருமையான சாப்பாடு. எந்த மகராசி கைகளோ! மணக்கிற சமையல். அருள் கைகளை வழித்து வழித்துச் சூப்பியபடி இவனைப் பார்த்து கண்களைச் சிமிட்டி இளித்தான்.

ஒவ்வொரு பெண் கைச்சமையலுக்கும் ஒவ்வொரு ருசி இருக்கிறது. என்றாலும் அம்மாவின் எளிமையான சமையலின் ருசி வேறொருவருக்கும் வாய்க்காது.அம்மா கையால் வெந்நீர் தந்தாலே அதற்குத் தனி ருசி இருக்கும். மெல்ல இருள் சூழும் போதுகளில் அம்மா கோயிலால் திரும்பி வருவாள். அவள் வலுக் கட்டாயமாக வெள்ளைச்சேலை உடுத்தி வன்மத்துடன் வேடிக்கை பார்த்தன.அம்மா தலைமுழுகி, ஈரக் கூந்தலை நுனியில் முடிந்து போட்டபடி ஒவ்வொருநாள் மாலையிலும் கூந்தலிலிருந்து நீர் சொட்டச் சொட்ட வெள்ளைச்சேலையின் பின்புறம் நனைந்தபடி தோற்றம் காட்ட, அம்மன் கோயில்களைத்



தேடிப்போக ஆரம்பித்தாள். திரும்ப வரும்போது அம்மா மேனியில் கற்பூர வாசனை வீசும். அம்மா பேரில் அம்மன் குடியேறி வருவாள் போல, பார்க்க பயமாகவும் அழகாகவும் இருக்கும்.

அம்மா மச்சம், மாமிசம் சேர்ப்பது கிடையாது. இருட்டியபிறகு தனியாக செங்கல் அடுப்பைமுட்டி தனிச்சமையல். ஒரு நேரம் கொஞ்சம் போலச் சாப்பிடுகிற அம்மாவால் எவ்வாறு இப்படி இவ்வாறு பம்பரமாகச் சுழன்று காரியம் பார்க்க முடிகிறது! மிகவும் குழைந்து போய்க் கஞ்சிப் பசையுடன் சோறும், ஏதோ ஒரு காயை வதக்கி வறட்டலாக ஒரு குழம்பும்.கடித்துக்கொள்ள அப்பளம் உண்டு கட்டாயமாக.

நொடிக்குள் சமைப்பாள் அம்மா. இவன் நாவில் நீர் சொட்டச்சொட்ட காத்திருப்பான். அம்மா இவன் தோளளவு உயரமிருப்பாள். வெள்ளரிப்பழத்தை பிளந்து வைத்திருக்கிற மாதிரி ஒரு நிறமும் குளுமையும் அம்மாவுக்கு. அம்மா அந்தக்காலத்தில் பேரழகியாக இருந்திருக்க வேண்டும். அதுதான் நிறையக் குழந்தைகள் பெற்றாளோ! தோல் வற்றி நடை மெல்லத் தளர்கிற இந்த வயதிலும் அம்மா கண்கள் ஜோதியென ஜொலிக்கின்றன. இவன் நிமிர்ந்து வீம்பாக நிற்பான். கண்களால் அம்மாவைப் பார்த்து கனியச் சிரித்தபடி. அம்மா அண்ணாந்து இவன் நெற்றியில் திருநீறு பூசி விடுவாள்.

"அம்மாளே!..." ஆத்மார்த்தமாக வேண்டுகிற அம்மா குரலில் இவன் கரைந்து போய்விடுவான். கற்பூரம் எரிந்த மீதியின் வாசனையும் சூடுமாக ஈரலிப்பாக அம்மா நெற்றியைத் தீண்டுகிறபோது வாசனை நாசியை நிரப்ப இவன் சிலிர்ப்பான். அம்மா மூச்சு ஒரு கணம் இவன் மார்பில் பட்டுவிலகும். இவனுக்கு உடனே பசியெடுத்துவிடும்!

சுலோச்சனா அக்கா அவசரச் சமையல். இவளுக்கு எதிலும் அவசரம், என்னத்தைக் கண்டாளோ இந்த அத்தானிடம். மகுடி கேட்ட நாகம்போல மயங்கிக் கிடக்கிறாள். அக்கா நிறையக் கறிகள் வைத்திருப்பாள், நிறையக் குழந்தைகளைப் பெற்றதுபோலவே. ஒன்றுக்கு உப்புக் கூடினால் இன்னொன்றில் உப்பே இருக்காது.மீன்குழம்பு மட்டும் அசலாக வைத்திருப்பாள். எல்லாவற்றையும் சேர்த்துக் கலந்துவிட ஒரு அபூர்வ ருசி பிறக்கத்தான் செய்கிறது.

சுலோ அக்கா வீட்டுக்கு இவன் கடைசியாகப் போனநாளே மறந்து விட்டது. அத்தான் முணுமுணுத்தபடி சட்டென முகத்தைத் திருப்பிக்கொண்டு போனான். இந்த அத்தான் ஒரு சரியான சேற்று எருமை. 'காட்ஸ்' அடிக்கிறதையும், கடமைக்காக ஏதோ வேலைக்குப் போவதையும், மீதி நேரமெல்லாம் ஓரே குடியையும் தவிர இவன் எதைச் சாதித்தான்? சுலோ அக்காவை வருஷம் தவறாமல் அம்மா வாக்குகிறதில் மட்டும் படுசமர்த்தன். சுலோ அக்கா இதழ்கள் வெடித்து மார்பு வற்ற கத்தரிக்காய் போல ஆகிவிட்டாள். அத்தான் மீண்டும் ஏதோ வாய்க்குள் 'கசமுச' என்றான். போனால் போகட்டுமே! இவன் அக்காவைப் பார்க்கத் தானே வந்தான்.

"இருக்கிறதுகளுக்கும் வீண் கரச்சல்...."

அத்தான் வெளிப்படையாகவே கொக்கரிக்க ஆரம்பித்தான். அக்கா நாக்கைக் கடித்தபடி இவனைக் குசினிக்குள் இழுத்துப் போனாள். இவன் கைகளை விடாமல் இறுகப் பிடித்துக் கொண்டேயிருந்தாள்.

"சாப்பிடுறியாடா..." தளதளக்க கேட்டாள். இவன், நிமிர்ந்து பார்க்க சக்தியற்றுப் போனதால் மௌனமாக உட்கார்ந்தான். அக்கா மளமள வென்று சாப்பாடு போட்டாள். பிசைந்து பிசைந்து இவன் கைகளில் கொடுக்க ஆரம்பித்தாள்.

அக்கா மூக்கை உறிஞ்சுவது கேட்டது.

"அம்மா கோயிலுக்கு போவதை விட்டுட்டா...."

"......"

"அம்மா கோயிலுக்கு போறதையும் விட்டுட்டா!...."

"....."

"அம்மா கோயிலுக்கு...." அக்கா குரல் உணர்ச்சிவேகத்தில் உடைந்து கீச்சிட ஆரம்பித்தது.

இவன் கையை உதறிவிட்டு வேகமாக வெளியே போக ஆரம்பித்தான்.

"கையைக் கழுவிவிட்டு போடா...." அக்கா கடைசியில் அழுகை வெடிக்கிற குரலில் அழைத்தாள். இவன் திரும்பிப்பார்க்க விருப்பமில்லாமல் உள்ளங்கைகளை இறுகப் பொத்தியபடி காற்றைக் குத்தியபடியே போனான். அக்கா குமுறிக் குமுறி அழைத்தபடி இவன் பின்னே வரும் அரவம் கேட்டது. காதைப் பொத்திக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

"இனிமேல் ஒரு வீட்டுக்கும் போக மாட்டேன்".இவன் காற்றுக்கு சபதம் செய்து கொடுத்தான்.

ஒருதரம் நான்கு மெயின் ரோட்டுகளுக்கும் உள்ள பெரிய பாலங்களை உடைத்து விட்டுப் போய்விட்டார்கள்!

கோணாமலை ஆட்களைப் பிரித்துப் பிரித்து விட்டான். இவனுக்கு வடக்கு ரோட்டு. டிராக்டர்களில் மண்ணையும் கல்லையும் கொண்டு வந்து குழிகளைச் சனங்கள் பீதியால் பரபரத்தபடி நிரப்பினார்கள்.

இவன் காவல்! 'ரெடி'யாக நின்றான். சுறுசுறுப்பும் மிக்கவனாக சுற்று முற்றும் பார்த்தபடி. வான்களும் பஸ்களும் பாரத்தைக் குறைத்து பள்ளத்தில் மெதுவாக இறங்கி இறங்கிப் போயின.

யாரோ இவன் முழங்கையில் இதமாகப் பற்றினார்கள்.

திரும்பிப் பார்த்தான்.

சுந்தரிக்கா!

விந்தி விந்தி நடக்கிற சுந்தரியக்கா! உதய காலத்தில் பஸ் பிடித்து வேலைக்குப் போய் மாலை மங்கி இருள்சூளும் நேரங்களில் வீட்டுக்குப் போய்ச்சேர்கிற சுந்தரியக்கா! அம்மா பதைபதைப்புடன் வாசலை பார்த்தபடியே நிற்பாளோ! இந்த விந்தல் கால் மட்டும் இல்லாவிட்டால் இந்திரன், சந்திரன் எல்லாரும் சுந்தரியக்கா பின்னால் வரிசையாக காத்து நிற்க மாட்டார்களோ? உதய காலத்தில் பஸ் பிடித்து வேலைக்குப் போய் இருட்டிய பிறகு வீட்டுக்குப் போய்ச்சேர உறுதியுடன் பழக்கப்படுத்திக் கொண்டாள் சுந்தரியக்கா.

சுந்தரியக்கா இவனையே பார்த்தபடி நிற்க... இவன் பராக்குப் பார்ப்பவன் போல.... பஸ் மேல் பள்ளத்தில் இறங்கிக் கொண்டிருந்தது. சுந்தரியக்கா மேலும் இவனை நெருங்கி நின்றாள். கைப்பையைத் திறந்து சில நோட்டுக்களை இவன் பொக்கெற்றுக்குள் திணித்தாள். இவன் திரும்ப அவள் கைகளுக்குள் திணிக்க.... ஆற்றாமையுடன் இவனையே பார்த்தாள்.

"வச்சிரன்ரா...."

"வேண்டாம்.. எனக்கொண்டும் வேண்டாம்."

சுந்தரியக்கா இவனை மேலும் கீழுமாக பார்த்தாள்.பறட்டை பற்றிப்போன தலை முடியிலிருந்து வெயிலிலும் மழையிலும் அலைந்து திரிந்த கால்வரை செம்புழுதி படிந்திருந்தது. சாறனை உயரத் தூக்கி தொடை தெரியுமளவுக்கு முடிச்சுப்போட்டு இருந்தான். சேட் தோள்மூட்டில் பிரிந்திருந்தது.

"ஒரு சேட்டாவது வாங்கலாமெல்லே...."

"....."

"வச்சிரன்னா...."

"அங்கா.... பார்.... பஸ் வெளிக்கிடப் போகுது...."

பெரிய கண்கள் சுந்தரியக்காவுக்கு. இவனை உறுத்துப்பார்த்தாள். கண்களுக்குள் இவனைச் சிறைப் பிடித்துக் கொண்டு போய் விடும் உத்வேகத்துடன் பார்த்தாள். கன்னங்களை நனைத்துக்கொண்டு பாயுமாறு இரு வைரச்சொட்டுகள் உருகி வழிவதென சிந்தினாள்.

திரும்பத் திரும்பப் பார்த்தபடி சுந்தரியக்கா போனாள். கடைசி ஆளாக விந்தி விந்திப் போய் பஸ்ஸில் ஏறினாள். பின்புறக் கண்ணாடியூடாக இவனையே பார்த்துக் கொண்டு நின்றாள். இவன் தற்செயலாக திரும்புபவனென அந்தப் பக்கம் பார்த்தான்.

பின்புறக் கண்ணாடி முழுவதும் விசாரித்தபடி சுந்தரியக்காவின் பெரிய கண்களைக் கண்டான். இவன் சட்டென்று மறுபுறம் திரும்பிக் கொண்டான்.

"சொந்த உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்க மாட்டேன்".

காற்றிடம் சபதம் செய்தான்.

இன்று எல்லாம் அசாதாரணமான புதிய தோற்றம் காட்டின. திளைத்துக் குளித்த மேனியை குளிர்காற்று தழுவிக்கொண்டு போயிற்று. இவன் வானத்தை நிமிர்ந்து நோக்கினான். 'பளிச்' செனும் நீலவானில் பஞ்சுப் பொதிகள் மிதப்பதென்ற அழகிய சித்திரை வானம் இன்றில்லை.மழைக்கோலம் காட்டிற்று.காற்று இறுக்கமாக இருந்தது. மெல்லமெல்ல கிழக்கு மூலையிலிருந்து இருண்ட மேகங்கள் பரவிக் கொண்டிருந்தன.

மைக்கேல் சேதி சொன்னான்!

(10ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்ணுரிமை

(4ம் பக்க தொடர்ச்சி)

சரிநிகர் சமானமென்று சொன்னவனுக்கு புசுபுசுவென்ற அடர்ந்த மீசையுண்டு. தெளிவும் உறுதியும் நிறைந்த பார்வை உண்டு. அவன் தான் எட்டயபுரத்துக் கவி பாரதி. சமூகத்தின் மேம்பாடு பெண்ணின் மேம்பாட்டுடன் இணைந்தது என்றார் மோகன்தாசு காந்தி. எங்கள் வாழ்வும் வளமும் தாயிலிருந்து தான் ஆரம்பமானது என சென்ற நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே அமெரிக்க வானிலே வீரத்துறவி விவேகானந்தர் முழங்கினார். இப்படியாக பல சகாப்தங்கட்கு முன்பாகவே பெண்களுக்காக குரல் கொடுத்தவர்கள் பெண்ணின் பெருமையை உணர்ந்தவர்கள் இந்திய நாகரீகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது மட்டுமல்ல அவர்கள் ஆண்கள்தான் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். தமிழ் இலக்கிய வானில் பண்டிதை விசாலாட்சி அம்மாள் முதல் கொண்டு பல பெண் எழுத்தாளர்கள் வலம் வருகின்றார்கள். ஆனால் கனமான பெண் பாத்திரங்களை படைத்து அவளுடைய சமூக நிலைகட்கு மாற்று தேட முயன்றவர்கள் என்னும் போது ஜானகிராமன், ஜெயகாந்தன் என்னும் ஆண் எழுத்தாளர்கள் தான் நினைவுக்கு வருகின்றார்கள். ஆக, பெண் என்பவளின் சமூக நிலைப்பாட்டில் மேன்மையை ஏற்படுத்த ஆவேசமாக வாதிட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆண்கள்தான் என்பது தெளிவாகின்றது.

## பெண்ணுரிமை: புதிய பார்வையின் அவசியம்

ஒரு ஆணும் பெண்ணும் அன்பின் முதிர்வால் இணைந்து தங்கள் வாழ்க்கையை அழகியதாக்கி ஒருவருக்கு ஒருவர் துணையாகி, நன்மக்களை ஈன்று சமுதாயச் சங்கிலி அறுபடாமல் சமூகப் பங்களிப்புக்குமான ஒரு அமைப்பாகவே திருமணத்தை நமது முன்னோர்கள் கண்டார்கள். "இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்ற வரைவிலக்கணத்தை செந்நாப்போதர் வகுத்திருக்கின்றார்.

ஆண்- பெண் இணைந்து வாழும் வாழ்க்கையானது பல்லாயிரம் ஆண்டு மனித நாகரீகம் தேடித்தந்துள்ள உன்னதமான வளர்ச்சி என்றே கருத வேண்டியிருக்கின்றது. விரலின் ஆதாரத்தில் நகம் நிற்பது போன்று அன்பின் ஆதாரத்தில் நிலைபெறுவது குடும்பம். பரஸ்பர மரியாதையில் துளிர்விட்டு, விட்டுக் கொடுத்தலில் பூத்துக் குலுங்க வேண்டியது குடும்பம். இயற்கையின் படைப்பின்படி ஆண்- பெண் வெவ்வேறு இயல்புடையவர்கள். ஆனால் குடும்பம் என்று இணையும்போது பால் வேறுபாடுகள் நீங்கிப்போக வேண்டும். குடும்பம் என்பது புனிதத்துவத்துக்கு இலக்கணமாக விளங்கும் கோவிலாகும்.

இன்றைய சமூக அமைவில், பொதுசன கவனத்தை ஈர்க்க முனையும் மேட்டுக்குடி பெண்களின் கைகளில் சிக்கியிருப்பதே பெண்ணுரிமை இயக்கத்தின் துரதிருஷ்டமாகும். சமூகத்தில் பெண் துயரங்களை பல முனைகளிலும் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது என்பதும் அவளுக்கு உரிய கௌரவம் தரப்படவில்லை என்பதும் மறுப்பதற்கில்லை. ஆனால் இந்தக்குறைகளை நிவர்த்தி செய்யும் நிவாரண முறைகள் எதுவும் முன்வைக்கப்படவில்லையே என்பதுதான் அதிர்ச்சியை தருகின்றது.

பெண்ணே! பொங்கி எழு! அடிமை தளைகளை அறுத்தெறியுங்கள். ஆண்துணையின்றி வாழ முடியும் என்று நம்பிக்கை கொள்ளுங்கள். திருமணம், குடும்பம்,குழந்தை என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவியுங்கள். ஆண் வர்க்கத்துக்கு பாடம் புகட்டுங்கள்.இப்படியான கொள்கைகளை இன்றைய பெண்ணுரிமை வாதிகள் மேடைகளில் முழங்கி கைதட்டல்களை நிறையவே வாங்கி விடுகின்றார்கள். இவர்களுடைய உணர்ச்சிகரமான அர்த்தமற்ற பேச்சுக்கள் குடும்பம் என்னும் புனிதமான மாபெரும் கோவிலை கறைபடுத்த தொடங்கியுள்ளன. இப்படியான செயற்பாடுகள் தொடரும் பட்சத்தில் கிழக்கு உலக குடும்ப வாழ்வு இனி வருங்காலங்களில் மிகுந்த அவலங்களை சந்திக்க நேரிடலாம் என்ற அச்சம் மேலிடுகின்றது. பெண்ணுரிமை இயக்கங்களால் ஏற்பட்ட நன்மைகளிலும் மேலானதாக தீமைகள் தான் மேற்குலக சமூக அமைப்பில் தனது அடையாளங்களை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதை கூர்ந்து நோக்கின் அறிய முடிகின்றது.

பெண்ணுரிமை என்பது ஆணுடன் மோதுவது, அனல்பறக்க முழங்குவது, பெண் உரிமையின் அடையாள வெற்றி என்ற கோதாவில் கவர்ச்சிப் பொருளாக ஆகிக் கொள்வது என்ற வழமையான பயனற்ற செயற்பாடுகளையே நாமும் செயலாக்கிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. பெண் கல்வி வாய்ப்பை பெற வேண்டும். அவளுக்கு பொருளாதார சுதந்திரம் அமைய வேண்டும். இவ்விரண்டு செயற்பாடுகள்தான் அவள் தனது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளவும் விடுதலையை ஏற்படுத்திக் கொள்ளவும் வழிசமைக்கும் என்பது மரபு வழிப்பட்ட திண்ணை வேதாந்தமாகும்.

ஆண்- பெண் வேறுபாடின்றி கல்வி எல்லோருக்கும் அவசியமானதாகும். "கற்க கசடற கற்றவை கற்ற பின் நிற்க அதற்கு தக" என்பது வள்ளுவர் வாக்கு. கல்வியின் நோக்கம் ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே அறிந்து கொள்வதற்கும் தானும் வளர்ந்து- தான் சார்ந்த சமூகத்தையும் வளர்ப்பதற்கு துணை புரிவதாகவும் அமைய வேண்டும். கற்ற கல்வியின் துணை கொண்டு ஆண்- பெண் ஒருவருடன் ஒருவர் போராடவும் அழித்துக் கொள்ளவும் முனைவார்களேயானால் அஃது அந்த சமூகத்தின் நேயம்- நீதி- நியாயம்- தார்மீகம் என்பவற்றிற்றுக்கு அடிக்கப்பட்ட சாவுமணியேயாகும். கல்வியின் ஆதாரத்தில் ஆண்- பெண் தோழமையுடன் இணைந்து நன்மக்களை ஈந்து நல்லுலகம் படைக்க வேண்டும். பொருளாதார தன்னிறைவு எனப்படுவது ஆண்- பெண் இணைந்த குடும்ப அமைப்புக்கே ஏற்பட வேண்டும். குடும்பத்தில் தனியொருவருக்குமட்டுமே ஏற்படும் பொருளாதார பலம் குடும்பம் என்ற கப்பலை மூழ்கடிக்கும் ஆரம்ப முயற்சியாகவே அமையும். ஒருவருக்கு மட்டுமே ஏற்படக்கூடிய பொருளாதார நிறைவு- ஆண் பெண் இணைந்து எழுப்பும் குடும்பம் என்ற அமைப்புக்கு ஏற்பட்ட நிறைவாகவே சிறக்க வேண்டும். இல்லாவிடில் கூட்டுணர்வு என்ற அடிப்படை கோட்பாடு தகர்க்கப்பட்டு விடும். ஆகவே, பெண்ணுக்கு ஏற்படக்கூடிய தனித்த தன்னிறைவு நன்மையை தருவதற்கு மாறாக சமூகத்தின் முக்கியமான அமைப்பான குடும்பத்தையே தகர்த்துவிடும் அபாயம் உள்ளது.

பெண்ணுரிமை முழக்கங்களோ கல்வியோ பொருளாதார தன்னிறைவோ மட்டும் பூரணத்துவமான சமூக வாழ்வை பெண்ணுக்கு அளிக்கமாட்டாது என்பது துணிபு. பெண்ணுரிமை வேண்டி அரசாங்கங்கள் சட்டங்கள் இயற்றலாம். பொதுசன இயக்கங்கள் கண்டனக் குரல்கள் எழுப்பலாம். இவைகள் ஓரளவு விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். இவையெல்லாம் பெருமளவில் பிரச்சார செயற்பாடாகவே அமைந்து விடுகின்றன என்பது நடைமுறையாகும்.

பெண் என்பவளால் மட்டுந்தான் ஒரு முழுமையான மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இவ் அவனியில் ஆணும் பெண்ணும் சமம் என்ற அடிப்படை நோக்கு ஏற்படுத்தப்பட வேண்டும். இங்கு ஒரு அடிப்படையான, ஆனால் அமைதியான ஒரு புரட்சி நிகழ வேண்டும். அந்தப் புரட்சியை பெண்தான் செய்ய வேண்டும் என்பதை விட அவளால் தான் செய்ய முடியும் என்பதே உண்மை. அவள் பிள்ளைகள் பெறும் இயந்திரம் அல்ல. பத்து மாதம் தன் குருதியை உணவாக்கி ஊட்டி சுமந்து பெறும் குழந்தை நாளைய உலகிற்கு அவள் அளிக்கும் உன்னதமான பங்களிப்பாகும். சிற்பியின் கைவண்ணத்தில் கல் சிற்பமாகின்றது. பொற்சிற்பியின் கைவண்ணத்தில் தங்கம் ஆபரணமாக மிளிர்கின்றது. அன்னையின் கைவண்ணத்தில் நாளைய உலகின் சிறப்பு உறுதி செய்யப்படுகின்றது.

நாளைய சமூகத்தை உருவாக்கும் சிற்பியான பெண் தன்னுடைய குழந்தை செல்வங்களை சமதர்ம சமத்துவ மனித நேய கண்ணோட்டத்துடன் வளர்க்க வேண்டும். அவர்கள் அறிவு பூர்வமான சிந்தனைகளை ஆராதிக்க பழக்கம் ஏற்படுத்த வேண்டும். வானின் விரிவும் மண்ணின் ஈரமும் கொண்ட மலர்களாக அந்தச் செல்வங்கள் மணம் பரப்புவதற்கு களம் அமைத்து கொடுக்க வேண்டும். நம்பிக்கையை ஊட்டி வளர்க்க வேண்டும். வீடே உலகமல்ல, உலகம் தான் வீடு என்ற பரந்த பார்வையை உருவாக்க வேண்டும். ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் எதிரியல்ல- தோழர்கள். ஆணும் பெண்ணும் சமமென கொள்வதால் அறிவில் ஓங்கி மனித நேயத்தில் செழித்து வையகம் தழைக்கும் என்ற அடிப்படை உண்மையை எமது தமிழ் சகோதர சகோதரிகள் தரிசிக்கும் போது, இங்கு ஆரோக்கியமானதோர் உலகம் அமையும். புதியதோர் உலகு செய்வோம் எனும் பாவேந்தர் பாரதிதாசனாரின் வரிகளை உறுதி மொழிகளாக கொள்வோம். இதை நம்முடைய தலைமுறை சாதிக்கும் என்பது நம்பிக்கை.

> பெண்ணே! பொங்கி எழு! அடிமை தளைகளை அறுத்தெறியுங்கள். ஆண்துணையின்றி வாழ முடியும் என்று நம்பிக்கை கொள்ளுங்கள். திருமணம், குடும்பம், குழந்தை என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவியுங்கள். ஆண் வர்க்கத்துக்கு பாடம் புகட்டுங்கள்.

# மாதிரி சட்டமன்றத்தை

(5ம் பக்க தொடர்ச்சி)

பார்த்து) உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்.

குறள்பித்தன்:- பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் பாடிய சின்னப் பயலே (மீண்டும் ஆளும் கட்சி அணியினர் எழுந்து கூச்சல்)

செல்வி சரசுவதி:- சபாநாயகர் அவர்களே, சின்னப்பயல்' என்ற சொல்லை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும்.

சபாநாயகர்:-எதிரணிக்கு கொடுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. உட்காருமாறு உத்தரவிடுகிறேன். ஆளும் அணித்தலைவி அவர்கள் விருப்பம் போல் பேசி முடித்து விட்டு அமர்ந்து கொள்ளலாம் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறள்பித்தன்:- எங்கள் கருத்தைத் தெரிவிக்க சபாநாயகரும் சேர்ந்து முட்டுக்கட்டையாக இருக்கலாமா?

சபாநாயகர்:- என்னைக் குற்றம் சாட்டிப் பேசுவதை அனுமதிக்க முடியாது. (ஆளும் அணி தலைவியைப் பார்த்து) நீங்கள் பேசலாம்.

சரசுவதி:- இன்றையத் திரைப் படப்பாடல்களில் இசைதான் மேலோங்கி நிற்கிறது. காரணம் அது கருத்துள்ள பாடலாக இல்லை. அதனால் காதில் விழாமல் இருப்பதற்காக இசையால் பாடலை அமுக்கி விடுகிறார்கள். ஆனால் கண்ணதாசன் காலத்தில்....

சபாநாயகர்:- (செல்வியைப் பார்த்து) உன்னைக் கண்டு நான் வாட, என்னைக் கண்டு நீ வாட...

செல்வி சரசுவதி:- (சபாநாயகரை பார்த்து) உன்னைக் கண்டு நான் ஆட, என்னைக் கண்டு நீ ஆட.

குறள்பித்தன்:- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் பாடி இருக்கிறார்! (செல்வியைப் பார்த்து கை நீட்டி) "திருடாதே பாப்பா திருடாதே"

சபாநாயகர்:- குறள் பித்தனுக்கு கொடுத்த "டைம்" முடிந்து விட்டது. இனியும் எழுந்து நின்றால் காவலர்களால் வெளியேற்றப்படுவீர். அம்மாவின் சம்மதத்தோடு இதை நான் அறிவிக்கிறேன். (காவலர் இருவர் குறள் பித்தனைக் கையைப் பிடித்து இழுக்கிறார்கள்.)

(இந்த நேரத்தில் மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை இணை அமைச்சர் எம்.அருணாசலம், பீட்டர் அல் போன்ஸ் எம்எல்ஏ ஆகியோர் விழா அரசாங்கத்திற்குள் வந்தனர்.)

சபாநாயகர்:- நம்முடைய சட்ட மன்றம் எப்படி நடக்கிறது என்பதை பார்வையிட மத்திய அமைச்சர்கள் வந்து இருக்கிறார்கள். சட்டமன்றத்தை அவர்கள் கண்காணிக்கிறார்கள்.

எதிர்க்கட்சி உறுப்பினர் ஏராளமான ஆதாரங்களுடன் சபைக்கு வந்திருப்பது போல் தெரிகிறது. அவற்றை எல்லாம் இங்கு பேச வேண்டாம் எனது அறையில் வந்து தனியாகக் கொடுக்கவும். வேறு எதையும் தனியாகக் கொடுக்க வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

சபாநாயகர்:-இப்போது ஆளும் அணியைச் சேர்ந்த கவிஞர் ஸ்ரீதரன் பேசுவார்.

ஸ்ரீதரன்:- சமீபத்தில் வெளியான படம் ஒன்றில் "இஞ்சி இடுப்பழகா" என்று ஒரு பாடல் வருகிறது. இஞ்சி இடுப்பழகு என்றால் என்ன பொருள் என்றே தெரியவில்லை. இது மாதிரி பல பாடல்களைக் கூறலாம்.

கண்ணதாசனின் பாடல்கள் காலம் எல்லாம் நிலைத்து நிற்பவை.

"அதோ அந்தப் பறவை போல",
"கட்டித் தங்கம் வெட்டி எடுத்து",
"காலங்களில் அவள் வசந்தம்"

போன்ற பாடல்கள் எல்லாம் என்றும் மறக்க முடியாதவை.

முடிவுரை

சபாநாயகர்:- நமது கோடை கால கூட்டம் ஊட்டியில் நடப்பதாக இருக்கிறது.அதில் விரிவாகப் பேசிக் கொள்ளலாம். இப்போது எதிரணியின் தலைவர் சாது சாரங்கபாணி விவாதத்தை முடித்து வைப்பார்.

சாது.சாரங்கபாணி:-

நாட்டில் பெருமையை விளக்கும் வகையில் உடுமலை நாராயண கவி பாடல்களை எழுதியுள்ளார். சமதர்மத்தை வலியுறுத்தும், "சிரிப்பவர் சில பேர், அழுபவர் சில பேர்" என்ற பாடலை மருதகாசி எழுதி இருக்கிறார்.

அஞ்சாமை பற்றி கண்ணதாசன் "நெஞ்சம் உண்டு நேர்மை உண்டு ஓடு ராஜா" என்று பாடினார்.

அதே நேரத்தில், "சத்தியமே லட்சியமாய்க் கொள்ளடா, தலைநிமிர்ந்து உனை உணர்ந்து செல்லடா" மருதகாசியின் பாடலை யாரும் மறந்து விட முடியாது. ஆகவே, திரைக் கூடத்தை இலக்கியகளமாக்கியவர் பலர். அதில் கண்ணதாசனும் ஒருவர் என்று கூறி முடிக்கிறேன்.

ஆளும் அணி சரசுவதி:- கண்ணதாசனைப் போன்றுதான் மற்றவர்களும் பாடியிருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ள முடியாது. காதல் பாடல்களில் மட்டுமல்ல, அரசியலையும் அடிப்படையாக வைத்து பாடல்கள் எழுதி இலக்கியம் படைத்தவர் கண்ணதாசன்.

பெருந்தலைவர் காமராஜரைப் போற்றும் வகையில், "படித்ததினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு. பாடம் படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு" என்று பாடினார்.

அறிஞர் அண்ணா உடல் நலக் குறைவினால் பாதிக்கப்பட்டு, அமெரிக்கா சென்று, சிகிச்சை பெற்றுத் திரும்பி வந்த நேரம், அரசியல் சூழ்நிலையால், கண்ணதாசன் நேரில் சென்று அண்ணாவிடம் நலம் விசாரிக்க முடியாத நிலை. அப்போதுதான் தில்லானா மோகனாம்பாள் படத்திற்காக "நலந்தானா" என்ற பாடலை எழுதினார்.

(நலந்தானா பாடலை செல்வி அப்போது பாடினார். அப்போது சபாநாயகர் நாதசுவரம் வாசிப்பது போன்று பாவனை செய்தார்)

உடனே சரசுவதி:- "யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியலே" என்று பாடத்துவங்கவே.

சபாநாயகர் (குறுக்கிட்டு):- நீங்க தானே என்னை இங்க உட்கார வச்சீங்க என்று பட்டென்று பதில் கூறவே, அரங்கமே சிரிப்பொலியால் அதிர்ந்தது.

இரு தரப்பு விவாதம் முடிந்ததும், சபாநாயகர் அரு நாகப்பன் தீர்ப்பு வழங்கினார். தீர்ப்பில் அவர், கூறியதாவது:-

சங்க இலக்கியச் சொற்களை எல்லாம் தமது கவிதைகளில் கையாண்டவர் கண்ணதாசன். அவர் இலக்கியத்திற்கே விளக்க உரையாக விளங்கினார்.

காதலை அளவோடு, அழகோடு சொல்ல வேண்டும் என்பார்கள். "அத்தான் என்னத்தான், என்னைத் தான் எப்படிச் சொல்வேனடி, என்ற பாடல் இதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

சொல்லாமல் தெரிய வேண்டும் சொல்லவும் தனிமை வேண்டும். அதுதான் காதல். முழுமை பெற்ற காதல் என்றால் அது முதுமை வரை வர வேண்டும். இப்படி காதல் பற்றிக் காவியம் எழுதியவர் கண்ணதாசன்.

துவக்க காலத்தில் தமிழ், தமிழ் நாடு என்று சிந்தித்த அவர், பின்பு, திராவிடம், இந்தியா, உலகம் என்ற அளவில் பரந்த சிந்தனையுடன் கவிதைகளை எழுதினார்.

மனம் விரிவடையும் போது எண்ணங்கள் முதிர்ச்சி பெறுகின்றன. "நாடு அதை நாடு. நாடாவிட்டால் ஏது வீடு?" என்று கேட்டார். அவர்.

தாலாட்டுப் பாடலில் கூட பொதுவுடமை சித்தாந்தத்தைப் பாடினார். இலக்கியம் என்பது ஒரு இலட்சியத்தை உடையதாக இருக்க வேண்டும். எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்று அவர் விரும்பினார். "உழைக்கும் கைகளே, இந்த நாட்டை உருவாக்கும் கைகள்" என்றார்.

பாபநாசம் சிவன் பாடல்களில் பக்தியை அதிகமாகப் பார்த்தோம். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களில் உழைப்பின் பெருமை தெரிந்தது. தன்மான உணர்ச்சி இருந்தது. பாரதிதாசனின் திரைப்பட பாடல்களில் மொழி உணர்ச்சி முக்கியமானதாக இருந்தது.

ஆனால், கண்ணதாசனின் கவிதைகளில் தான் ஏராளமான இலக்கியங்கள் இருந்தன.

சரித்திரத்தில் நிலைத்தவர்

வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்களின் மனதில் நிற்பவர் யார்? மாபெரும் வீரர்மானம் காப்போர் சரித்திரம் தன்னில் நிற்கின்றார்." என்று பாடல் எழுதிய கண்ணதாசன் ஒருவரே திரைக் கூடத்தை இலக்கிய களமாக்கி சரித்திரத்தில் நிலைத்து நிற்கின்றார்.

இவ்வாறு தீர்ப்பு வழங்கினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 4 சொல்லாரம்

## திருவரங்கன்

டிசம்பர் 22ந் திகதிக்கு முன் கிடைக்கும் விடைகளில் முதலாவதாக எடுக்கப்படும் சரியான விடைக்கு

**பரிசு 20 பவுண்கள்**

**இடமிருந்து வலம்:**

3. ராமனுக்கு சீதை போல் கண்ணனுக்கு இவள் - கண்ணதாசன் பாடல்களில் அதிகம் இடம்பெற்றவள்.(2)
8. "சோற்றுக்கை"ப் பக்கமாக.(2)
9. சிற்றாசையை இப்படிக் கூறுவர்.(3)
10. ஒருத்தனும் ஒருத்தியும் வாழ்வில் இணையும் சடங்கு - இதை பெரியோர் ஆயிரம் காலத்து பயிர் என்றார்கள்.(5)
12. பாத்திரம் - நடிகருக்கு அல்ல.(3)
13. காமன்.(3)
14. பெண்களின் நடையை இந்த நடை என்பார்கள்.(3)
17. இடமிருந்து வலத்தில் ஒருத்திக்கு வந்து வாய்க்கும் ஒருவன் இப்படி அழைப்பார்கள்.(3)
18. ஒரு வகைப் பழம்- உள்ளே முத்துக்கள் போல் விதையுடன் உண்ணும் பகுதியும் இருக்கும்.(3)
19. ஒன்று அதிகமானால் இதுவாகும்.(2)
20. இதைப்போட்டு கோடுகளால் கோலம் போடுவார்கள்.(3)
21. ராமன் பாக்கு நீரிணையை கடக்க பாலம் கட்டப்படும் போது இந்த பிராணியும் உருவத்தில் சிறியது என்றாலும் உதவி செய்ததாம்.(3)
23. நவரத்தினங்களில் சிவப்பான் கல்.(4)
24. திருக்குறளில் நலம் புனைந்து உரைத்தல் அதிகாரத்தில் அன்னத்தின் இறகை இப்படி அழைத்தார் திருவள்ளுவர்.(2)

**வலமிருந்து இடம்:**


1. கொடு.(2)
2. ஒற்றை.(2)
7. ஞானிகள் உரைப்பது.(5)
22. ராமன் பதினான்கு ஆண்டு வனவாசம் செய்த போது - பரதன் ராமனின் இதை அரியணையில் வைத்தான்.(3)

**மேலிருந்து கீழ்:**

1. மேடைக்கு இலக்கிய பெயர். சிதம்பரத்தில் சிவன் ஆடும் மேடை உதாரணம்.(5)
2. நடைபெறவிருக்கும் ஒன்று நடைபெறாமல் தள்ளிப்போடுவது இப்படி வைப்பது என்பார்கள்.(3)
3. வீணை கொடியுடைய வேந்தன். கைலை நாதனை கானத்தால் கவர்ந்தவன்.(4)
4. மருந்து திரவமாக இருந்தால் இப்படியும் அழைப்பார்கள்.(3)
5. சுற்றி வருவதை இப்படி கூறுவர் - முக்கியமாக கோவில்.(3)
7. பஞ்ச பாண்டவர்களில் மூத்தவன்.(4)
9. கூட்டல் கணிதக்குறி.(2)
11. மன்மதனின் அரண்மனை. "இதுவில் மந்திர மாலைகளா - உதயகாலம் வரை உன்னத லீலைகளா... என்பது கவிஞர் பாடல். படம்: ராஜபார்ட் ரங்கதுரை.(6)
14. கடிதம் ஆரம்பிக்கும் போது இப்படித்தான் பெரும்பாலும் ஆரம்பிக்கப்படும்.(5)
15. வனவிலங்குகளின் பொந்துகளை, இப்படியும் அழைக்கலாம். எலியும் இதில் வசிக்கும்.(2)
16. ஓரெழுத்து பூச்சி.(1)
19. வேலை என்றும் சொல்வார்கள். அதே நேரத்தில் பெரியோருக்கு இப்படி செய்தல் அடங்குதல் என்றும் வரும்.(2)
21. கெடு - இல்லாமல் செய்தல்.(2)
22. கொடுமைப் படுத்துபவன்.(2)

**கீழிலிருந்து மேல்:**

6. இரும்பு நீரினாலும் காற்றினாலும் இது பிடிக்கும்.(2)
23. கி.பி.5ம் நூற்றாண்டில் தமிழ்நாட்டை ஆண்ட தமிழ் மன்னர்கள் - மகாபலிபுரம் இவர்களுக்கு சான்று பகரும்.(4)
24. தோழியிடம் தலைவி சொல்லி அனுப்புவது.(2)




**உங்கள் முகவரி**

பெயர் :..........................................................

முகவரி :..........................................................

..........................................................

..........................................................

..........................................................

# நட்பு

நேற்றை வரைக்கும்-
உன்னை நான் அறிந்திருக்கவில்லை-
இன்றுதான்-
என்னை நீ! அடையாளம் கண்டாய்-

நாங்கள்-
மனிதக் குழுக்களாய்
மறைந்திருந்த போது-
ஒருவரையொருவர்-
தெரிந்து கொள்ள நேரம் கிடைக்கவில்லை-

இப்போது-
எங்கள் இருவர் கரங்களும்-
இணைத்துக் கொண்டதில்

இந்த மண்ணின்-
ஏதோவொன்று-
உன்னோடும், என்னோடும்-
பேச முனைந்ததே!
அதன் பெயர்தான்,
நட்போ?

**-நி.சி.ஜோர்ஜ்**



## சொல்லாரம் -2 க்கான சரியான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ | பூ | ர் | வ | ரா | க | ம் | | |
| | மா | | ச | மா | தி | | | |
| கா | லை | | ங் | | | ம் | ட | இ |
| | | வ | த | ன | ம் | | | ள |
| | ப | ண | ம் | | க | | ளை | வே |
| | | க் | | வ | ரா | ளி | | னி |
| | யோ | க | ம் | | | கா | த | ல் |
| ர | ச | ம் | | ன் | | | ர | |
| | னை | | ரா | மா | ய | ண | ம் | |


**சொல்லாரம் -2** க்கான சரியான விடை அனுப்பி பரிசு பெறும் அதிஷ்டசாலி வாசகர்

**திருமதி. ஆர். சபாநாதன்**
390, High Road,
Willesden,
LondonNW *10 2DY*

### வாசகர் கவனத்திற்கு:-

*கடந்த வாரம் வெளியான 'சொற்சதுரங்கம் 9' கட்டங்களில் சில இலக்கங்கள் தவறுதலாக விடுபட்டுள்ளன. சரியான படிமம் இதோ......*

**இடமிருந்து வலம்** *இல.29 ஆக இருக்க வேண்டியது 28 என தவறுதலாக அச்சாகியுள்ளது.*




**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**சொல்லாரம்-4**
**THAMIZHOSAI**
**253 WESTERN AVENUE**
**LONDON W3 0PP**

# தியானம்

**கரவை.மு.தயாளன்**

ஓ! இறைவா!
ஒரு தேசத்தின் பக்தன்
நான்
தேசத்தை, எனது
மக்களை
தேகத்துள்தேக்கி
விட்டேன்
அவர்களே நானாகி-
நானே அவர்களாகி-
தினம், தினம்
தியானம் செய்கிறேன்.
மீண்டும் மீண்டும்
அவர்கள் என் மனத்
திரையில்-
இப்போ இறைவா
உம்மைநான் நெருங்கி
விட்டேனா?
உமக்கு என்னைத்
தெரிகிறதா?
எனக்கு இன்னும் நீர்
தெரியவில்லை
என்னுடைய மக்கள்-
என்னுடைய உயிர்-
என்னுடைய சதைகள்-
யாவும் உன்னுடையதாகி
விட்டநிலையில்
உன்னைத் தேடினேன்-
உலக ரட்சகனே!
உன்னை நாடினேன்.
உனது பிம்பம் எனக்கு-
மெல்லத் தெரிகிறது.
இறைவா!
இதுதான் தியானமா?

# லண்டன் நிகழ்வுகள்....

டிசம்பர் 12 சனி
மாலை
நத்தார் கொண்டாட்டம்
(மேற்கு லண்டன் தமிழ் ப்பாடசாலை)

இடம்: ***Wembley High School***
***East Lane***
***Wembly.***
விபரங்கட்கு: 081 904 3937

டிசம்பர் 12 சனி
மாலை 6.00
நத்தார் இராப்போசனமும், நடனமும்.
(பிறன்ற் ஏசியன் அக்கதமி)
இடம்: ***Alperton High Scool- Annex***
***Ealling Road***
***Wembley.***
விபரங்கட்கு: 081 866 3363



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காலம் உனக்கொரு

(7ம் பக்க தொடர்ச்சி)

"தெற்கு றோட்டாலை சாமான் வருகுதாம்... நாங்கள் இடையிலே மாத்திக் கொண்டு வரவேணுமாம்...."

கோணாமலை விருட்டென எழுந்தான். படபடவென சில உத்தரவுகளைப் போட்டான்.

"தெற்கு றோட்டுத்தானே!... பயமில்லை... கனசாமான் வேண்டாம்...ஆளுக்கொண்டு போதும்...."

"பெருமாள் வெகிக்கிளை எடு.... மழை வரும்போல கிடக்கு.... சாமான் நனையாமல் கவனமாக மாத்தவேண்டும்...."

"யோசேப் இஞ்சியே இருக்கட்டும்...."பெருமாள் ஒரு அருமையான ட்ரைவர், ரோட்டுகளை ஒவ்வொரு அங்குல அங்குலமாகப் படித்து வைத்திருந்தான். குண்டும் குழியுமாக இருக்கும் ரோட்டுக்களிலே கியரை மாற்றாமலே ஒடித்து வெட்டியபடி பறந்து செல்ல முடியும் பெருமாளால்.

பெருமாளுக்குப் பக்கத்தில் கோணாமலை தாவி ஏறினான். அவனுக்குப் பக்கத்தில் பெரியண்ணன்.

இவன்.... கேதாரி....அருள்.... அன்பரசன்.... மைக்கேல்... பின்புறம் புகுந்து கொண்டார்கள். இவன் கதவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். பெருமாளைத் தவிர எல்லோருடைய உள்ளங்கைகளிலும் பொத்தியபடி 'சாமான்' இருந்தது. 'ரெடி'யாக இருந்தார்கள்.

செம்புழுதியைக் கிளப்பியவாறு பாய்ந்து செல்ல வாரம்பித்தான் பெருமாள். வானம் ஒருமுறை பெரிதாக உறுமிற்று.

இன்னும் கொஞ்ச தூரத்தில் மெயின் ரோட்டில் ஏறிவிடலாம். சட்டென்று செங்கோணத்தில் திரும்ப வேண்டும். பெருமாள் கியரை மாற்றுவதற்கு ஆயத்தமானான். சந்திக்கும் இடத்தில் கிழட்டு ஆலமரத்தின் நிழலில் சனங்கள்கூடி நின்றார்கள். பெருமாள் வேகத்தைக் குறைத்துக் கொண்டான்.

கண்கள் பெரும் ஒளிவெள்ளத்தில் கூசின. உச்சியிலிருந்து கீழ்வானம் நோக்கி படர்கிற ஒரு கொடியாக மின்னல் பளபளத்தபடி இறங்கிற்று. வானம் மீண்டும் ஒருதரம் வஞ்சனையுடன் கனைத்தது. பெருமாள் தடுமாறினான். ஒரு கணம் நிதானித்தான்.

படபடவென ஏதோ முறிந்து விழுகின்ற சத்தம் கேட்டது. சனங்கள் விலகிச் சிதறினர். ஆலமரத்தின் பெரியகிளையொன்று 'ஓ'வென அலறியபடி பூமியை அறைந்தது.

சனங்கள் முகத்தில் பெருங்குழப்பம் பரவிற்று. கோணாமலை "முன்னேபோ" என்றான். பெருமாள் கிளச்சை ஊன்றி மிதித்தான்.

கோழை வழிகின்ற ஒரு திரைத்த கிழவன் கைகளை ஆட்டிக் கொண்டே முன்னே வந்தான்.

"மக்காள்..."

கோணாமலை என்ன என்பவனெனப் பார்த்தான்.

"ஆல் முறிஞ்சு விழக்கூடாது மக்காள்.... போறபயணம் ஆபத்து மக்காள்...."

அருள் கெக்கெலி கொட்டிச் சிரிக்க வாரம்பித்தான்.

"எங்களுக்கு ஒவ்வொரு நிமிசமும் ஆபத்துத் தானேணே அப்பு!...."

கிழவன் பரிதாபமும் பச்சாத்தாபமும் வழிய இவர்களைப் பார்த்தான்.

பெருமாள் லாகவமாக திரும்பியபடி மெயின் ரோட்டில் ஏறினான். மீண்டும ஒரு மின்னல் அடிவானம் நோக்கி இறங்கிற்று. காற்று மிகவும் கனமாக இறுக்கிக்கொண்டே போனது. என்ன இது? இன்று எல்லாம் அசாதாரணமாக மாறிவிட்டன. தென்கிழக்கு மூலையிலிருந்து, இது சித்திரை மாதம் என்பதை மறந்துபோய், படுவேகத்தில் ஊதல் காற்று வீசிக்கொண்டிருந்தது.

"பெருமழை வரப்போகுது பெருமாள்... கெதியா..." பெருமாள் பலங்கொண்டமட்டும் மிதித்தான்.

சனங்கள் பரபரத்தவாறு வீடுகளுக்குள்புகுந்து கொண்டிருந்தார்கள். பருவந் தப்பிப் பெய்யும் மழையை ஆச்சரியமும் ஆவலுமாக வரவேற்கும் பாவம் அவர்கள் முகங்களில் தெரிந்தது. இவர்களின் வான் உறுமிக்கொண்டே செல்வதை வாசல்களில் நின்று கவனமாகப் பார்த்தார்கள்.

கனத்த பெருந்துளிகளாக மழை இறங்க ஆரம்பித்தது. கண்ணாடி மங்கத் தொடங்கிற்று.கனவில் தெரியும் தோற்றமென ரோட்டும் மரங்களும் விசித்திரத் தோற்றம் காட்டின. பெருமாள் 'வைப்பரை'ப் போட்டான்.

வேலை செய்யவில்லை....!

பெருமாள் இலகுவில் சளைத்துவிடுபவனல்ல. கும்மிருட்டை ஊடுருவி பூனையைப் போல பார்க்க இவர்கள் பழக்கப்படுத்தப்பட்டவர்கள். கூர்ந்து பார்த்துக் கொண்டே போனான்.

என்ன மாதிரி ஒரு மழை! இவன் தனது வாழ்நாளில் காணாத மழை. புழுதி அடங்கிக் போகிற வாசனைமிருந்தது. இவன் நாசி நிறைய வாசனையை வாங்கி அனுபவித்தான். காலைத்தூக்கி முன்சீட்டில் இலகுவாக வைத்துக்கொண்டான். சட்டென்று ரோட்டு வெறிச்சோடிப் போகிறது. ஏனோ? சனங்கள் எவரும் இல்லை. மழைதான் காரணமோ என்னவோ? எதிரே ஒரு வாகனம் கூட வரவில்லை. கொட்டும் மழையில் சளைக்காமல் நனைந்தபடி ஆடி ஆடிப்போன ஒரு கிழட்டு எருதைத்தவிர, வெறிச்சோடும் ரோட்டு.

மூர்க்கத்தனமாக பூமியை மூழ்கடிக்கும் ஆவேசத்துடன் அம்புகளாக மழை வீழ்ந்து கொண்டிருந்தது. வானம் எச்சரிக்கிற மாதிரி அடிக்கடி பெருமிடிகளைக் கொடுத்தது. கூடவே உச்சியிலிருந்து கீழ்வான் நோக்கி வானத்தை கூறுகளாகப் பிரிக்கும் கூர்வாளென பாயும் மின்னல்.

இவர்கள் எல்லாருக்கும் ஏனோ மயிர்க்கால்கள் குத்திட ஆரம்பித்தது. இதைவிட குருதியை உறைய வைக்கும் குளிரை தாங்க இவர்கள் பழகிக்கொண்டவர்கள். ஆனால் இன்று என்னவாயிற்று? எலும்புக் குருத்துக்குள் ஊடுருவிப் புகுந்து கொள்கிற குளிர்.

அருள் கைகளைத் தேய்த்து சூடாக்கினான். நெஞ்சுக்குக் குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டான். இவனைப் பார்த்து இயல்பான தோழமையுடன் சிரித்தான். அருள் இன்று ஏனோ வழமையை விட அதிகமாக இளிக்கிறான். முகத்தில் ஒரு விசித்திரமான ஒளி பிறந்தது அவருக்கு.

இவனுக்குள் ஏனோ திடீரென அம்மா, சுலோ அக்கா, சுந்தரி அக்கா எல்லோரும் உதித்தார்கள்.

மழையுடன் சேர்ந்து அம்மா மேனியில் மணக்கிற கற்பூரவாசனை வீசிற்று. மழையில் கற்பூரத்தை கரைத்தவன் எவன்?

சுந்தரியக்காவின் பெரியகண்கள் முன்னே தோன்றின. இரு கனத்த வைரத்துளிகளைச் சிந்தின. சுந்தரியக்கா இதமாக இவன் கைகளைத் தொடுவது போலிருந்தது. சுந்தரியக்கா இந்த மழையிலும் வேலைக்குப் போயிருப்பாள்!

சுலோ அக்காவின் கீச்சுக்குரல் பேய்க்காற்றில் கலந்து வந்தது இவனை, ஆதங்கமும் பொறுக்க முடியாமல் பீறிடுகிற அன்புமாக சுலோ அக்கா அழைத்துக்கொண்டிருப்பதாக, தோன்றிற்று.

இவன் ஒருகணம் கண்களை மூடினான். நீண்ட பெருமூச்சு ஒன்று அடி இதயத்திலிருந்து உற்பத்தி கொண்டு தொண்டைக் குழியைக் பிளந்துகொண்டு ஒரு நாகமென வெளிவந்தது.

இவன் கண்களைத் திறந்தான். பெருமாள் ஒரு வளைவில் வேகத்தை மாற்றாமலே லாவகமாகக் திரும்பிக் கொண்டிருந்தான். சூரன்தான்! ஒரு நூறுயார் தூரத்துக்கப்பால் பார்வை புலப்படாதபடிக்கு கனத்த திரைகளாக மழை விழுந்துகொண்டிருக்க, வைப்பர் வேலை செய்யாமலே படுவேகமாக வானைச் செலுத்திப் போகிறான்! வேறு எவனால் இப்படி முடியும்? அசகாய சூரன்தான்!ரோட்டு நேரே கோடு போட்டதெனச் செல்கின்றது. பெருமாள் கிழித்துக்கொண்டு போனான். ஏன்....? என்ன?... பெருமாள் சடக்கென்று பிறேக் போட்டான். எதிரே ஏதோ பிசாசுத் தனமாக நெருங்கிக் கொண்டிருந்ததாக எல்லோரும் உணரவாரம்பித்தார்கள்.

பெருமாள் கோணாமலையைத் திரும்பிப் பார்த்தான். கோணாமலை இறுகிய முகத்தவனாய் "முன்னேபோ" என தலையைக் குலுக்கினான். எல்லோருக்கும் வேகமாக மூச்சு வாங்க வேண்டும் போலிருந்தது. உள்ளங்கையை இறுகப் பொத்திக் கொண்டார்கள்.

பெருமாள் நிதானமாக முன்னே போனான். தலையை வெளியே நீட்டி நீட்டிப் பார்த்துக்கொண்டே போனான்.எல்லா வீடுகளும் தெருவாசலைப் பூட்டியபடி மௌனமாய் மழையில் கொட்டக்கொட்ட நனைந்து கொண்டிருந்தன.

எதிரே ஒரு சிறிய ரோட் மெயின் ரோட்டில் கலக்கும். அந்தச் சந்தியில் ஏதோ கள்ளத்தனத்துடன் வஞ்சகம் புரிய ஒளிந்திருப்பதாகப் பட்டது. பெருமாள் கொட்டும் மழையில் வெளியே தலையைப் போட்டான்.

பெரிய வாகனம் ஒன்று, தனது பூதாகரமான உடலை மறைக்கப் பெரும் பிரயத்தனம் செய்தவாறு நின்றுகொண்டிருந்தது! .... பெருமாள் கொடுப்புகளை இறுக நெறுமினான்... முகம் சட்டென கறுத்து வீங்கிப் போனது.

கோணாமலை புரிந்து கொண்டான். கண்கள் இரத்தம் கொட்டு பவையெனச் சிவந்தன. இவர்கள் எல்லாருக்கும் புரிந்துவிட்டது. மண்டைக்குள் ஒரே 'விறு விறு'. மிக வேகவேகமாக மூச்சுவந்தது. உடல் தகிப்பபதெனச் சுட்டது.

"ரெடி... ரெடி..... ரெடி...." என இதயம் துடித்தது. உத்தரவுகளைப் பெற ஆயத்தமாக இருந்தார்கள். ஒவ்வொரு அங்கமும் துடிக்க வாரம்பித்தது.

கோணாமலை பரபரத்தான்.

"அம்பிட்ட கையொழுங்கையுக்குள்ளை விடு.... உடைச்சுக் கொண்டு தப்பவேண்டியதுதான்... எங்கெங்கையெல்லாம் நிக்கிறாங்களோ?.... வளைச்சுப்போட்டான்களோவும் தெரியாது... சனியன் பிடிச்ச மழை!..."

பெருமாள் வேகமாக பின்னே போக ஆரம்பித்தான். இவன் பின்னால் பார்த்தான். பின்புறமிருந்தும் 'வாகனம்' ஒன்று பிசாசு மாதிரி நெருங்கிக்கொண்டிருந்தது!

பக்கத்திலே ஒழுங்கைமாதிரி ஒரு ஓடை தெரிந்தது. பெருமாள் பெரும் பிரயத்தனத்துடன் உள்ளே நுழைய முற்பட்டான்.

ஆனால் அதற்குள் அவர்கள் முந்திக்கொண்டார்கள். நெருப்பை உதிழ்ந்தபடி இருபுறமிருந்தும் அச்சமும் அவதானமாக நெருங்க ஆரம்பித்தார்கள். மழை அவர்களுக்கு வாழ்த்துக் கூறிக்கொண்டிருந்தது. வானம் இவர்களைப் பார்த்து இடிஇடியெனச் சிரித்தது. மின்னல் பழிப்புக் காட்டுவதென அடிக்கடி பளபளத்துக் கண் சிமிட்டியது.

ஒவ்வொரு நொடியும் மிகப் பெறுமதியானதென இவர்கள் உணர்ந்தார்கள். தோல்வி படுவேகமாக இவர்களை நோக்கி வாயைப் பிளந்தபடி வந்தது. தோற்று விடுவார்களா இலகுவில் என்ன.... தலையை அப்படியும் இப்படியும் குலுக்கினான். உணர்ச்சி வேகத்தில் கிடுகிடுவென நடுங்கினான்..... ஏதாவது செய்.... அவசரமாக.... கெதியாக.....

வாயில் கிளிப்பைக் கடித்து இழுத்தான். ஐயோ! இடது கை...., இடதுகை.... வழமில்லை!! இழுபட மாட்டேன் என்கிறது.

இவனுக்கு துரதிஷ்டவசமான தப்பு ஒன்று நிகழ்வது நன்றாகவே தெரிந்தது.

தொடைகளிலும் கணுக்காலிலும் குதிரை பலம் சேர்ந்தது. கால்விரல்களில் முழு பலத்தையும் சேர்த்துக்கொண்டே உந்தி எழுந்தான். பேய்த்தனமாக ஊதிக்கொண்டிருந்த காற்றிலும், பெரு அம்புகளாகத் துளைக்கும் மழையிலும் நனைந்து சொதசொதவென அனுங்கிக்கொண்டிருந்த சகதியில் விழுந்தான். அவசர அவசரமாக நாலைந்து சுற்றுக்கள் புரண்டு தூரவிலகினான்.

இவனுக்கு புரிந்துவிட்டது.... அவ்வளவுதான்.... இன்னும் ஒரு நொடிதான்... அருள்! அடமுட்டாளே!... அவசரப்பட்டு விட்டாயே!

தொடைகளில் இலேசாக அடிபட்டிருக்க வேண்டும். நொண்டிக் கொண்டே எழுந்தான். கால்போன திக்கில் ஓட ஆரம்பித்தான். செம்மண் நிறத்திலே கணுக்கால் வரை உயர்ந்து கனவேகத்துடன் வெள்ளம் ஒழுங்கைகள்வழியே பாய்ந்து கொண்டிருந்தது. 'சளசள' என்று இவன் கனத்த காலடிகளைத் தாங்கமாட்டாமல் வழிவிட்டுக் கொடுத்தது.

பெரும் இடிபோல முதல் தரம் வெடித்தது. வான் ஒருமரம் பெருகக் குலுங்கிற்று. தொடர்ந்து ஒன்று... இரண்டு... மூன்று... நாலு... ஐந்து... ஆறு...அவர்கள் அஞ்சி நின்று விட்டார்கள் நிலையாக!

இவன் ஓடிக்கொண்டே ஒருதரம் திரும்பிப் பார்த்தான். பெரும் புகைமண்டலமொன்று மழையை விலக்கிச் செல்லும் கரும் பூதமென மேலேழுந்து கொண்டிருந்தது. மூச்சுத் திணறும் கந்தக நெடி எங்கும் சட்டெனப் பரவிற்று.

இவன் மூளை செயலற்றுப் போய்விட்டது. கண்கள் நேரே வெறித்தன. கால்கள் மட்டும் தம் பாட்டில் இவனை கனவேகமாக எங்கோ

கோணாமலை!... பெருமாள்!.... கேதாரி!... பெரியண்ணன்!.... மைக்கேல்!.... அன்பரசன்!....

அவ்வளவுதான்!... இனியென்ன?.... அவ்வளவுதான்... துண்டு துண்டாகப் போயிருப்பார்கள்.

இனி?

இவன் செய்ய வேண்டியது என்ன? எப்படியது தெற்கு ரோட்டுக்கு பத்திரமாகப் போய்ச்சேர வேண்டும். 'சாமான்' வரும். அவர்களைத் திசை திருப்பி விட வேண்டும், வருகிறவர்களுக்குச் செய்தி தெரிந்து திரும்பிப் போயிருப்பார்களோ? ... செய்தி சொல்வது யார்? இந்தக் காற்றும், மழையுமா?

இவன் தெற்கு ரோட்டுக்குச் போய்ச் சேரவேண்டும்! சனியனே! மழையே! நீ நிற்க மாட்டாயா?....

வானம் கடைசித்தடவையாக பெருமிடியொன்றைக் கொடுத்து ஓய்ந்தது. மழை வேகம் குறைய ஆரம்பித்தது. இவனுக்கு பன்னீர் தெளிப்பதென மெதுவான தூற்றல்களைப் போட்டது.

இவன் வெகுதூரம் ஓடிவந்துவிட்டான். இனிப் பயமில்லைப் போல் இருந்தது. இவன் பெருநடையாக நடக்க ஆரம்பித்தான். இன்னும் மூன்று மைல்களாவது கடக்க வேண்டியிருந்தது. இவன் கடந்து விடுவான்... எப்படியாவது!

மழை முற்றாக ஓய்ந்தது. மயான அமைதி நிலவிற்று. மரங்கள் மழையில் நடுங்கி அஞ்சிப்போய் ஆடாமல் அசையாமல் கண்ணீர் சிந்தின. வெள்ளம் மட்டும் இவனுடன் கூட வந்தது.

ஒழுங்கைகள் வலை பின்னிக் கிடப்பதென திக்குமுக்காட வைத்தது. சனங்கள் வீட்டு வாசல்களில் நின்றார்கள். இவனை விசித்திரமாகப் பார்த்தார்கள். ஆஜானுபாகுவான ஒரு வித்தியாசமான இந்த கலைஞன், கொட்டும் மழையில் நனைந்து விட்டு எங்கே இவ்வளவு அவசரமாகப் போகிறான்!

ஆறிப்போகலாமே, கொஞ்சம் இளைப்பாறிப் போகலாமே!... அல்லது போகாமலே விட்டுவிட்டால் என்ன... இன்னும் என்ன என்ன விபரீதங்களும் நிகழக் காத்திருக்கின்றனவோ இன்று!

இவன் போகாமலே விட்டால் என்ன?

சனங்கள் இவனை விசித்திரமாகவும், ஆவலாகவும் புதினம் பார்த்தார்கள். அவர்கள் கண்களில் ஒரு விதமான பயமோ... அன்றிப் பக்தியோ... தெரிந்தது. சிலர் கண்களில் அடக்கமாட்டாமல் பீரிடுகின்ற நட்பு தெரிந்தது.

ஜன்னல்களில் நிலவு முகங்கள் தோன்றின. கொஞ்சும் விழிகளால் இவன் முகத்தைத் துளைத்தன.

"போகாதே... போகாதே...." எனக் கெஞ்சுவதுபோல் இருந்தது அவர்களின் பார்வை.

இவன் விரும்பினால் ஒரு வீட்டுக்குள் புகுந்து ஓய்வெடுக்கலாம்.

இவன்தான் ஒரு வீட்டுக்கும் போக மாட்டானே! இவனுக்கு இவன் வேலை பெரிது. தெற்கு ரோட்டுக்கு விரைவில் போய்ச் சேரவேண்டும். ஒழுங்கைகளை விட்டுப் பிரிந்து ஒரு ரோட்டில் ஏறி விடுவிடென நடக்க ஆரம்பித்தான்.

கொஞ்சம் வயல்கள் இடையில் இவனைக் கண்டன. மழைநீரை ஆவலாக உறிஞ்சிக் குடித்துக்கொண்டிருந்தன. வருண தேவனோ இவன் என, நன்றியுடன் இவனை மௌனமாகப் பார்த்தன.

இவன் தாண்டிப்போனான்.

ஒரு மாதாகோயில் தெரிந்தது. கன்னிமேரி ஒரு கையில் குழந்தை ஏசுவை ஏந்தியபடி இவனைக் கனிவுடன் பார்த்தாள். மறுகைகளை காற்றில் தூக்கி இவனுக்கு ஆசீர்வாதங்களை அனுப்பினாள்.

இவன் தாண்டித் தாண்டிப் போனான்.

கோயில் ஒன்று வந்தது. விசித்திரம் தான்! ஊரிலிருந்த கொஞ்சம் விலகி தனியே இருந்தது. கோயில் சில பனைகளுடன் சல்லாபித்தபடி. வெறுமையாக கதவுளைத் திறந்து போட்டபடி இவனை ஆதங்கத்துடன் அழைப்பது போல இருந்தது. வானோக்கி உயரும் மணிக்கோபுரம் இவனை "வா" என அழைப்பதெனத் தோற்றம் காட்டிற்று.

இவன் விரும்பினால் கோயிலுகுள் சற்று நேரம் படுத்து இளைப்பாறலாம்!

இவன் ஆறமாட்டான்.இவனுக்கு வேலை பெரிது தெற்கு ரோட்டுக்கு கூடிய விரைவில் போய்ச்சேர வேண்டும். தனியனாக! நடந்தோ... அல்லது... ஓடியோ....

மீண்டும் ஓட ஆரம்பித்தான். இவனுக்கு சற்றுக் களைப்புத் தெரிந்தது. அதிர்ச்சியும் ஓட்டமும்... சற்றுக் களைத்துத்தான் போனான். வான் ஏதாவது போகுமெனில் தொற்றி விடுவான். விரைந்து போய்ச் சேரலாம்....

சற்றுத் தூரே தெற்கு ரோட்டை போய்ச் சந்திக்கிற பாதை இவன் வழியை செங்குத்தாக வெட்டிப் போவதைக் கண்டான். பழைய காலத்து வான் ஒன்று நிறைந்த சுமையுடன் முக்கி முனகிப் போய்க் கொண்டிருந்தது. கையைத் தட்டினால் கேட்குமா? நிற்பாட்டுவார்களா? இவனையும் தங்களுடன் அழைத்துப் போவார்களா?

கையைத் தட்டினான். திரும்பத் திரும்பத் தட்டினான்.

"வரட்டோ?...... நானும் வரட்டோ!....

மெல்ல ஓடிக்கொண்டே கேட்டான்.

"வா... வா... ஓடி வா!...." விசித்திரமான வேற்றுப்பாணியில் ஒரு குரல் கூப்பிட்டது.

இவன் நெருங்கிக்கொண்டிருந்தான். வெற்றுடம்புடன் சிலபேர் இருந்தார்கள். எல்லோரும் ஆண்கள். எங்காவது கோயிலுக்கு போய் வருகிறார்களோ?

இவன் மிகவும் நெருங்கிவிட்டான்.

வான் நின்றுவிட்டது. பழகாத புதிய முகங்கள் போலும்! வேறுபுறம் திரும்பி அசட்டையாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இல்லை... இல்லை... இல்லவே இல்லை! சட்டென்று சொல்லி வைத்தாற்போல இவன் முகம் பார்த்து எல்லாரும் திரும்பினார்கள். கண்களில் சொல்லொணா வன்மம் தொனித்தது.

ஒரே சமயத்தில் குதித்தார்கள். கைகளில் 'பளபள' எனக் குத்தீட்டிகளுடன் துப்பாக்கிகள் மின்னின. இவன் இதயம் சடக்கென நின்று விட்டது ஒருகணம்.

தொலைந்தான்! இவன் எதிர்பார்க்கவில்லை.... கனவில்கூட... அவர்கள் இப்படி ஒரு கோலத்தில் தந்திரமாக உலாவுவார்களென!

துப்பாக்கிகள் இவனை பசியுடன் நெருங்கிச் சூழ்ந்தன.மார்பை நோக்கி ஒரு இடி இறங்கிற்று. பிறகு தொடைகளின் நடுவே குறிபிசகாத ஒரு உதை!

சுருண்டு விழுந்தான். தலைமயிரைப் பற்றி இழுத்து வானுக்குள் எறிந்தனர்.

இரத்தமும் நிணமும், குமட்டும் வாசனையை பிறப்பித்துக் கொண்டிருக்க சிதறிப்போன தசைத் துண்டுகளாக....

கோணாமலை!... கேதாரி!.... பெருமாள்!.... பெரியண்ணன்!.... மைக்கேல்!... அன்பரசன்......

எல்லையற்ற அந்தகாரம் இவனைச் சூழ்ந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## குட்டிக்கதை

# இது உங்கள் பக்கம்
# சமூகப்பலகை

## சோகம்

காரிருள் வேளையில்
பாரினில் நான் பிறந்தேனா?
ஏன்?
என் வாழ்வு இருண்டு
கிடக்கின்றது!
ஒளியைத் தேடி
தினமும் நான் நடக்கின்றேன்
கரு மேகங்கள்
கலைய மறுக்கின்றன!
மழை நீரோடு - என்
கண்ணீரும் இங்கே
கலக்கின்றது!

**-நாவலடி நாவலன்**

## புதியன புகுதல்

**பித்துக்குளி**

அன்றைய கடிதங்களுள் முத்தான கையெழுத்தோடு கூடிய ஒரு கடிதம் என் கவனத்தை மிகவும் கவர்ந்தது. அது மாஸ்ரரின் கடிதமாக இருந்தது. நான் பேராசிரியராக பதவியுயர்வு பெற்றதற்கு வாழ்த்துக்களும், வேலையில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று அறிவுரைகளும் எழுதியிருந்தார். அவருடைய வார்த்தைக்கு ஒரு மதிப்பும் மரியாதையும் கொடுப்பது எனது வழக்கம். அதற்கு ஒரு காரணம் உண்டு.

அன்று அவருடைய வார்த்தை எனக்குள் ஏற்படுத்திய மாற்றம்தான், நான் இந்தளவுக்கு உயர்ந்து வந்ததற்கு காரணம்.அது நான் க.பொ.த(உ./த) பரீட்சையில் சித்தியெய்தியிருந்த சமயம். எனக்கு பல்கலைக் கழகம் புகுவதற்கு புள்ளிகளோ போதாது; ஆனால் இன்னம் ஒரு தடவை பரீட்சைக்கு தோற்றுவதற்கு சந்தர்ப்பம் இருந்தும் எனக்கு மேலே படிக்கும் எண்ணம் இருக்கவில்லை. மாறாக எங்காவது வேலையொன்றில் சேர்ந்து விடவேண்டும் என்பதில் கூடிய விருப்பமாக இருந்தது. எனது பெற்றோருக்கோ நான் மேலே படித்து பட்டங்கள் பெற வேண்டும் என்று ஆசை. இதனால் வீட்டில் ஒரே ரகளை. ஏதாவது சொல்லிப் பார்ப்பேன் ஒன்றும் பலிக்காது விட்டால் நான் எனது கடைசி அஸ்திரத்தை பாவித்து அவர்களை அடக்கிவிடுவேன். அது "நான் உங்களிலும் பார்க்க கூடப் படித்திருக்கிறேன். நீங்கள் என்ன பட்டதாரிகளா?" என்று கேட்பது.

ஒருநாள் நான் நண்பர்களுடன் கோயில் தேர்முட்டியில் இருந்து கதைத்துவிட்டு வரும்போது, மாஸ்ரர் எதிர்ப்பட்டார். அவர் எனக்கு 10ம் வகுப்பு வரை தமிழ் ஆசிரியராக இருந்தவர். "என்ன தம்பி" என்று சிரித்தபடி வந்தார். நானும் "பறவாயில்லை மாஸ்ரர்" என்று ஒப்புக்காக சொல்லி வைத்தேன்.இவர் அப்பாவின் பால்ய நண்பர். நின்று கதைத்தால் எங்கே இவரும் படிக்கச் சொல்வாரோ என்று பயந்து நான் அவரை விட்டகலப் பார்த்தேன்.அவரோ நேரே விடயத்துக்கு வந்துவிட்டார். "தம்பி பரீட்சை முடிவுகள் பல்கலைக்கழகம் போக போதாது என்று கேள்விப்பட்டேன் என்ன திட்டம் போட்டிருக்கிறீர்" என்று கேட்டார். நான் எனது எண்ணத்தைச் சொன்னேன். அவர் "தம்பி நானும் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர்தான் ஒரு பட்டதாரியல்ல. எனது புத்திமதியை நீர் கேட்பீரோ தெரியாது. நான் உமது அப்பாவின் நண்பன் என்றமுறையில் ஒன்று மட்டும் சொல்லுவேன், நீர் உமது அப்பாவைக் கேட்ட கேள்வியை உமது பிள்ளை உம்மிடம் கேட்காமல் இருக்க நீர் மேலே படிக்க வேண்டும்" என்று கூறிவிட்டு நடக்கத் தொடங்கி விட்டார். அது எனது மனதில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. நான் அடுத்தமுறை எனது முழுமுயற்சியையும் நம்பிக்கையோடு செய்து பல்கலைக்கழகம் புகுந்து, இன்று இந்த நிலைவரை வந்திருக்கிறேன்.

இப்படித்தான் நாங்கள் முதியவர்கள், பெற்றோர் சொல்லும் அறிவுரையை அவ்வளவு மதிப்பதில்லை. அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று நினைக்கிறோம். அவர்கள காலத்தில் அவர்கள் நிலைமைக்கு ஏற்றபடி தான் அவர்கள் எதையும் செய்திருப்பார்கள். முன்னோர்களின் அனுபவம் என்ற அஸ்திவாரத்தில் எமது புத்தி, திறமை என்னும் செங்கற்களை வைத்து எதிர்காலம் என்னும் கட்டிடத்தை கட்ட வேண்டும். மாறாக ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு எண்ணங்களுடன் வந்து கொண்டு இருந்தால், ஒரு கட்டிடம் கட்ட வேண்டிய செலவில் பல அஸ்திவாரங்கள் கட்டியது போல இருக்கும். விஞ்ஞானத்தில் ஒருவரின் கண்டுபிடிப்பு அனுபவத்தை வைத்து, மற்றவர் மேலே கண்டுபிடித்து வந்ததால், அது குறுகிய காலத்தில மிகப் பெரிய வளர்ச்சி அடைந்து வருகிறது. அரசியலும், கடவுள் பற்றிய கொள்கைகளும் பல்வேறு கருத்துக்களால் குழம்பிப்போய் காணப்படுவதன் காரணம், பழையவர்களுடைய கருத்துக்கள் காரணமின்றி ஆராயாமல் மறுக்கப்படுவதுதான். ரெலிபோன் மணி என்னை சிந்தனையில் இருந்து கலைத்தது. நீங்கள் மேலே சிந்திக்கலாமே.



(யோசனையோடு கூடிய கற்பனை)


**02.01.1993 சனிக்கிழமை மாலை 6.30 மணி**

மீண்டும்

# பொன் மாலைப்பொழுது

பொங்கல், புத்தாண்டு பெரு நாட்களை முன்னிட்டு பிரமாண்டமான மெல்லிசை நிகழ்ச்சி

## லண்டன் மெலொடிஸ்

*மெல்லிசை* (பகுதி 1)

ரசிகர் அவையிலிருந்து தெரிவு செய்யப்பட்டோர், அதாவது நீங்களே மேடையேறிப் பாடும் வினோத நிகழ்ச்சி.

இலைமறை காய்போல் இருக்கும் கலைஞர்களை வெளிக் கொணரும்

*தேனிசை மழை*

முதலாவதாகத் தெரிவுறும் பாடகருக்கு PARIS சென்று வருவதற்கான ஒரு விமான டிக்கட் பரிசாக வழங்கப்படும். பாட விரும்புவோர் முன்கூட்டியே உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

மீண்டும் லண்டன் மெலொடிஸின் மெல்லிசை (பகுதி 2)

**WALTHAM FOREST ASSEMBLEY HALL**

**FOREST ROAD, WALTHAMSTOW, LONDON E17**

விபரங்களுக்கு: அமலன் 081- 520 9819 ஸ்கந்தமூர்த்தி 081- 531 0818

அன்பளிப்பு: £5 மட்டுமே.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்